www.tamilarangam.net

ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது.

# தர்க்கீகம் 15

> சமுதாயத்தில், ஏற்றத் தாழ்வுகளேயும், சாதி, சமய, பிரதேச பிரிவினைகளேயும், இன குரோதங்களேயும் நிலைபெறச் செய்வதன் மூலம் சுரண்டலை எளிமையாக்கி கொள்வது முதலாளித்துவத்தின் இயல்பான தொன்று.
>
> —லெனின்

தை 1982 ★ மலர் 2 ★ இதழ் 3 ★ மாத இதழ் ★ வெளிநாட்டுப் பதிப்பு U. K 1£ / U. S $ 2

# ஜனதிபதி ரெட்டி விஜயத்தில் அரசியல் நோக்கம் உண்டா?

## ▶ நாடற்றவர் பிரச்சினையை தீர்க்க வழி பிறக்கும்!

## ▶ இலங்கை-இந்திய நட்புறவு பலமடையும்.

**இவை இரண்டையுமே இந்திய ஜனதிபதி நீலஞ் சஞ்சீவரெட்டியின் அழைப்புக்கான காரணங்களாக இலங்கை அரசு முன்வைத்தது. இத்தகைய காரணங்களை முன்வைப்பதற்கான அரசியற் சூட்சுமங்கள் என்ன? என்று கேட்டுக் கொள்வதோடு அதற்குவிடைகாண முயலுவதன் மூலமே உண்மை நிலையினை புரிந்து கொள்ள முடியும்.**


ஒரு நாட்டின் தலைவர்கள் இன்னெரு நாட்டிற்கு அழைக்கப்பட்டு, அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்பதும், அவர்களை மகிழ்விப்பதும் வரலாற்று முக்கியத்துவமாக கருதப்படுவதொன்றுன போதிலும், அர்சியல் காரணங்களே பிரதானமாக அமைகின்றது. அந்த வகையில், இலங்கை அரசின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொள்ள இந்திய ஜனதிபதி நீலஞ் சஞ்சிவ ரெட்டி அழைக்கப்படுவதனையும், அதன் அர்த்த புஷ்டியான காரணங்களையும் தெளிவாக நோக்க வேண்டியது அ சியமானதொன்றுகும்.

இங்கு இரண்டு விடயங்களை நாம் நோக்க வேண்டும், அதாவது, இலங்கையரசின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களையும், அதையொட்டி இந்திய ஜனதிபதியின் வருகையையும் கவனத்தில் கொள்வதோடு இவ்விரண்டு விடயங்களின் பின்னணியில் இலங்கை அரசின் நோக்கத்தையும் பிரதானமாக ஆராய வேண்டும். ஏனெனில், இலங்கை அரசின் எத்தகைய நடவடிக்கைகளும் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சனைகளுடன் பிணைந்தவையாகவே அமைகின்றது.

**சுதந்திரம்:-**

இலங்கை சுதந்திரமடைந்ததெனக் கொண்ட நாள் முதல் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் இன்னேரன்ன இடர்ப்பாடுகளுக் குட்படுத்தப்பட்டு வருவதனைக் கடந்த 34 ஆண்டு கால வரலாற்றிலும் கண்ட உண்மை. பிரச்சனைகள் தீர்ந்து போவதற்கான சூழ்நிலைகள் வளர்ந்து வருவதற்கு மாறுகப் பிரச்சனைகள்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)




# நட்சா திட்டமும் சிங்களக் குடியேற்றமும்

**நட்சா என்றுல், தேசிய விவசாய மாற்றுப் பயிர்ச் செய்கைக்கும் குடியேற்ற திட்டத்திற்குமான அதிகார சபயாகும். இந்த ஸ்தாபனம் 1978 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1-ம் திகதி வெளியான 302-ம் பிரகாரம் 12-ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதன் நோக்கம், நட்டத்தில் இயங்கும் தேயிலைத் தோட்டங்களை பொறுப்பேற்று மாற்று பயிர்ச்செய்கைகளை உற்பத்தி செய்வதுடன் குடியேற்ற திட்டத்தை அமைப்பதாகும்.**

நட்சா, ஏறத்தாள 26,000 ஏக்கர் தோட்ட நிலப்பரப்புக்களில் 1200 ஏக்கர் பரப்பில் மாற்று பயிர்களைச் செய்கின்றது. அவற்றில் தென்னை, கோப்பி, மிளகு, ஏலம், கராம்பு, கொக்கோ, தேசிக்காய், தோடை வகைகள் என்பன பயிரிடப்படுகின்றன.

இப் பயிர்ச்செய்கைக்காக உலக வங்கி 10 கோடி ரூபாவையும், இலங்கை அரசு 2 கோடி 80 லட்சம் ரூபாவையும் உதவுகின்றது. இலங்கை அரசு உலக வங்கியிடம் அளித்த ஒப்பந்தப்படி, 4500 குடும்பங்களை குடியமர்த்தவும், அதில் அத்தோட்டத் தொழிலாளர்களையும். அதிலும் இலங்கை பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு முதலிடமும், காணியில்லாத கிராம தொழிலாளர்களுக்கு இரண்டாம் இடமும், வேலையற்ற இளைஞர்களுக்கு மூன்றும் இடமும் அளிப்பதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளர்ன.

இதன் ஆரம்ப தலைவராக P. B. குணதிலகாவும் அவரைத் தொடர்ந்து தற்போது திரு. உடலகம தலைவராக உள்ளார். இந்த நட்சாவின் தலைமை நிலையம் பேராதெனியாவில் உள்ளது. நட்சாவினுல் சுவீகரிக்கப்பட்ட தோட்டங்களாவன, எவா எட்டைப் பகுதியில் கிராட்வெளி, லிட்டில்வெளி, பெல்லூட், நாலியவத்தை, தெல்தொட்ட, கலகா குறாப், அம்பலடானு, கிரிமிட்டிய, நாரகெல்ல நெல்லம்ப, வாரியகெல்ல, பவலானு, ஆகியனவும், நாவலப்பிட்டி பகுதியில் மலகெல்ல, தாமரவல்லி, பெனிலன், கல்மதுரை, ரக்சாவ, பர்னகள் ஆகிய தோட்டங்களாகும்.

இவற்றில் ஏறக்குறைய 50 ஆயிரம் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். வாரியகெல்ல தோட்டத்தில் 160 குடும்பங்கள் பிரஜாவுரிமை பெற்றிருந்தும் அவர்களுக்கு காணிவழங்காமல் 53 சிங்களக் குடும்பங்களுக்கு காணிவழங்கப்பட்டுள்ளது. இதில் 47 குடும்பங்களுக்கு தோட்டத்தொழிலே என்னவென்று தெரியாது. ஆனுல் அரசாங்கம் தமிழ்ப் பேசும் தோட்டத் தொழிலா

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

### சிறப்பிதழ் உள்ளே

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்" என்ற பெருமை மிக்க உழவர்களின் திருநாளாகிய தைத் திருநாளில் தர்க்கீகம் தன் சிறப்பிதழை உள்ளே இணைத்து உழவர்களுக்கு நல் வாழ்த்து தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்னைகளில் தமிழ்ப் பத்திரிகைகள்

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சனையானது முன் எப்பொழுதும் இல்லாதவாறு வளர்ந்துள்ள வேளையில், "தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளை தமிழ்ப்பத்திரிகைகள் எவ்வளவு தூரம் பிரதிபலித்து வந்துள்ளன" என்பது பற்றிய கருத்தரங்கு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொழுது சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளின் சுருக்கங்களைத் தொகுத்துத் தருகின்றோம்.**

### பிரச்சனைகளின் வரலாற்றுப் பார்வையில் தமிழ்ப் பத்திரிகைகள்;

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகளின் வரலாறு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாயினும், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையின் வரலாறு நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது. பத்திரிகை வரலாற்றின் ஆரம்ப காலங்களில், அன்றைய காலனித்துவ ஆட்சியை ஆதரிக்கும் போக்குடனேயே காணப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், உள்நாட்டுச் சுரண்டும் வர்க்கம் சார்ந்த பத்திரிகைகளாகவும், காலனித்துவத்தை எதிர்ப்பதாகவும் பரிணமம் பெற்றது. இந்தக் காலகட்டத்திலேயே புதிய பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இவற்றுள் சில கட்சிகள் சார்ந்த பத்திரிகைகளாகவும் வளர்ந்தது. ஆயினும் 49-ம் ஆண்டு வரைக்கும் தமிழ்த் தேசிய வாதத்தை வளர்க்கும் அளவிற்குப் பத்திரிகைகள் பங்காற்றவில்லை. பின்னர். உள்ளூர் தரகு முதலாளிகளின் முரண்பாடுகளின் நிமித்தம் பத்திரிகைகள் உருமாற்றம் பெற்றன. இந்தப் போக்கே தமிழ்த் தேசிய வாதம் வளர்த்தெடுக்கும் அளவிற்குப் பத்திரிகைகள் தள்ளப்பட்டன. இதே காலகட்டத்தில் இடதுசாரிப்போக்குடைய பத்திரிகைகளும், இடதுசாரிக் கட்சிகள் சார்ந்த பத்திரிகைகளாக தேசிய ரீதியில் வெளிப்பட்டன. தமிழ்த் தேசிய வாதம் வளர ஆரம்பித்தமையால் இடதுசாரிகளின் போக்கு மக்கள் மத்தியில் ஊன்றவில்லை. இந்த நிலையில், தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் கூர்மையடைந்துவரும் போக்கில் பல்வேறு நிலை சார்ந்த நிலையில், பல்வேறு அணுகுமுறைகளை மையமாகக் கொண்ட பிரதிபலிப்புக்களுடன் பல பத்திரிகைகள் வெளிவந்தன. இவற்றுள் பல இடைவெளியிலேயே காலாவதியாகி மறைந்து போயின.

இன்றைய நிலையில், தர்க்கீகம் கடந்த ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. பத்திரிகை மட்டும் வெளியிடுவதோடு மட்டும் நின்று விடாமல் ஈழப் போராட்டத்தை மையமாகக் கொண்டு மக்கள் மத்தியில் ஈடுபட்டுப் போராளிகளை உருவாக்கும் அமைப்பு முறையாகவும் மக்கள் மத்தியில் நேரடியாக ஈடுபட்டுள்ளது.

### மலையக மக்களின் பிரச்சனைகளில் தமிழ்ப் பத்திரிகைகள்;

பத்திரிகைகள், ஒரு சமூகத்தின் அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக மூன்று விதங்களில் பங்காற்ற முடியும். அவை: (1) அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்களை வெறும் சம்பவங்களாகச் செய்தியை மட்டும் வெளியிடல் (2) இப்பிரச்சினைகளைத் தம் கருத்துக்களுக்கு ஒப்ப முக்கியத்துவம் கொடுத்து வெளியிடல் (3) சமூகத்தின் அரசியல் கருத்துக்களைத் தாமே உருவாக்கி வெளியிடல் ஆகியன.

இந்த வகையில் இலங்கை பிரதான பிரச்சினையாக உள்ள மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் கடந்த காலங்களில் பிரளயமாக உருவெடுத்தன. இதன் வெளிப்பாடு அம்மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டமையின் உருவாக்கத்திலேயே பத்திரிகைகள் முகம் கொடுக்கத் தொடங்கின. இந்தக் காலகட்டத்தில் அவர்களது அன்றைய உரிமைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கோரிக்கைகளையும் கோசங்களையும் முன் வைத்தனவே தவிர, அவர்களது உடைமைப்பாட்டு ரீதியிலான அடிப்படை உரிமைகளை முன் வைத்ததாக வெளிவரவில்லை. இந்தப் பிரச்சினைகளின் நிமித்தம், எழுந்த போராட்டங்கள் கூட வெறும் செய்தியளவில் பிரதிபலித்தனவே தவிர போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வழிமுறைகளாக அமையவில்லை. இதே நிலையில் மலையக மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த தொழிற் சங்கங்கள் சார்பாக வெளிவந்த பத்திரிகைகள், அவர்களது நோக்கங்களை மட்டும் பிரதிபலிப்பதாக அமைந்தது. இவற்றுள் சில அரசாங்கத்தின் சூழ்ச்சிகளுக்குச் சார்பாகவும், நாடுகடத்தும் சூழ்ச்சிகளுக்கு உறுதுணையான பிரச்சார கருவிகளாகவும் செயற்பட்டன.

மலையக மக்களின் அன்றாட பிரச்சினைகளாக ஒவ்வொரு கால கட்டங்களிலும் எழுந்த கூலி உயர்வுப் பிரச்சினை, வேலை வாய்ப்புப் பிரச்சினை, மற்றும் பல பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கோரிக்கை விடும் செய்திகளாக முளைக்கிளம்பிய சில பத்திரிகைகள் வெளிவந்தன. பொதுவாக மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் எந்த இயக்கங்களோ, கட்சிகளோ, தொழிற் சங்கங்களோ சரியாக முன் வைக்காத நிலையில் பத்திரிகைகள் வெறுமனே சம்பவங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இவ்வாறு செய்திகளை மட்டும் வெளியிடுவதைப் பணியாகக் கொண்ட பத்திரிகைகளை நாம் பார்க்கும்போது, மலையக மக்களின் போராட்டத்திற்கு ஆதரவினைத் தேடித்தந்த பணியையோ, அல்லது மலையக மக்களின் போராட்டங்களை உருவாக்கிய பங்களிப்பினையோ இவை செய்யவில்லைஎன்பதைத் தெளிவாக்குகிறது.

ஆனால் தர்க்கீகத்தின் நிலைப்பாட்டைப் பொறுத்தவரை மலையக மக்களைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களின் விமோசனத்திற்கு வழி காட்டுகின்றது என்பதை அப்பத்திரிகையில் வரும் கட்டுரைகளிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. மலையக மக்களைப் பாட்டாளிவர்க்க குணம்சம் கொண்டவர்களாகப் பார்ப்பது கடந்தகால இடதுசாரிகளின் மத்தியில்கூட ஆழமாக இருக்கவில்லை. இந்த ~~நிலையில் மலையகமக்களின்~~ பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தமிழ் பேசும் மக்களையும் இணைத்து அவர்களின் வெறும் உரிமைகளுக்கான கூக்குரலாக இல்லாமல் உடைமைப் போராட்டத்திற்கான வழியைக் காட்டி நிற்பதில் தர்க்கீகம் தனது நிலையில் சரியாக, உறுதியாக நிற்கின்றது என்றே கூறலாம்.

### சமூகவியல் மாற்றங்களும் இலக்கிய ஆக்கங்களும்;

சமூகத்தினுடைய பல்வேறு பிரச்சினைகளைப் பிரதிபலிப்பது இலக்கியங்களே. இலக்கிய ஆக்கத்தைப் பொறுத்தவரை இலக்கியங்களின் சமுதாய உறவு வரையறுக்கப்பட்டது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## 'நாங்கள் ஒரு மெழுகுவர்த்தி'

ஒரு நூறு ஆண்டுகள் முன்னே — நாங்கள்
ஓடிஞேம் இலங்கைக்கு பிழைப்பைத்தேடி
பலகாலம் உழைத்த பின்னும் — நாங்கள்
படுகின்ற துன்பங்கள் கோடி
ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் — நாங்கள்
அனுதை என்ற பட்டம்
அம்மையார் ஆண்ட காலத்திலும்—எங்களுக்கு
அகதிகள் என்ற பட்டம்
தொண்டமான் வந்த காலத்திலும்—நாங்கள்
தொழிற்சங்க உறுப்பினர் என்ற பட்டம்
தொல்லைகள்வந்த நேரங்களில்—எங்களுக்கு
தொழிலாளர் என்ற பட்டம்
இலங்கையில் வாழ்ந்தபோதும் — நாங்கள்
இந்தியர் என்ற பட்டம்
இந்தியா வந்தபின்னும் — எங்களுக்கு
இலங்கையர் என்ற பட்டம்
எத்தனை பட்டங்கள் பெற்ற
இளைஞர்கள் இந்தியாவில் கோடி
இப்படி பட்டங்கள் பெற்ற — ஈழவர்
இலங்கையில் பல கோடி
எத்தனை தொழிற்சங்கம் தோன்றியும்—எங்கள்
இன்னலைப் போக்கிட வில்லை
இந்தியா வந்த பின்னும் — அச்சங்கம்
எங்களை விடுவதாக இல்லை
ஆங்கிலேயருடன் சென்ற எங்களுக்கு
ஆதர்சன உரிமைகள் இல்லை
அரைக்காணி நிலங்கண்ட கள்ளத்தோணிக்கு
அமைச்சர் பதவிக்கு பஞ்சமில்லை
'உரிமைக்கு போராடு' என்றுகுரல் கொடுத்திருந்தால்
உறங்கியா கிடந்திருப்போம்
இதை உணர்த்தாத தொழிற்சங்க வாதிகளை —இவ்
உலகத்தினின்று விரட்டி அடிப்போம்
உரிமையற்ற நிலையை நினைத்துப்பார்த்தால்
உடம்பு எரிகிறது தீப்பற்றி — இதை
உணராது உழைக்கின்றோம் அந்நாள்தொட்டு—
——நாங்கள்
உவமைக்கு ஒரு ''மெழுகுவர்த்தி''

**தேவதாஸ்**
காஞ்சிபுரம், தமிழ்நாடு

## வாசகர் வாக்கு

கடந்த இதழில் ''தமிழ்ப் பிரகடனம்'' தொடர்பான கேலிச் சித்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அரசியல் ஞானம் சற்றுமே இல்லாத சிலர் தாம் சிந்தித்த வாறெல்லாம் நடக்க முற்படுவது ஈற்றில் தவிடு பொடியாகப் போகும் என்பதை மற்றவர் வாயிலாக அல்லாமல் அனுபவ வாயிலாக இன்று நாம் உணர்ந்த உண்மை. விடுதலை என்றால் சிலர் ஏதோ சுலபமான காரியம், 10 பேர் என் பின்னுல் நின்றுவிட்டால் பரலோகத்தைத் கையில் பிடித்து விடுவேன் என்றெல்லாம் கற்பனை லோகத்தில் மிதக்கின்றார்கள். உண்மையில் விடுதலை என்றால் என்ன? என்று கூட சிலர் சரிவரப் புரியாமல் விடுதலை என்று கூறிக்கொண்டு என்னவோ எல்லாம் செய்கிறார்கள். இது யாருக்கு பயன்? முதலில் எதையும் தர்க்கீக ரீதியாக சிந்திப்பதன் மூலமே எதற்கும் விடை காண முடியும் என்பதை தர்க்கீகம் நன்கு காட்டுகின்றது. அதன் பணி தொடரட்டும்.

ஆ. ப. தேவபாலன்
19, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

மலையக மக்களின் பிரச்சனைகள் பற்றி உண்மையாகவும், திரிகரண சக்தியுடனும் வெளிக்காட்டி அவற்றிற்கு வழி காட்ட முற்படும் தர்க்கீகம், கடந்த இதழில் நாடு கடத்தப்படும் ஈழவர் இந்திய மண்ணில் படும் இன்னல் என்ற தலைப்பில் அங்குள்ள நிலைமைகள் பற்றிய கட்டுரை ஒன்றை வெளியிட்டு எம் மக்களுக்கு எதிர்கால விமோசனத்திற்கு வழி சமைக்க உத்வேகம் அளிக்கப்பட்டது. இதுவரையில் அரசாங்களினலும், அரசியற் கட்சியினலும், தொழிற் சங்கங்களினலும் மற்றும் குழுக்களினலும் புறக்கணிக்கப்பட்டு பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டு வரும் இவ்வேளையில் தர்க்கீகம் எம் எதிர்கால நல் வாழ்விற்கு வழி காட்டும் என்ற நம்பிக்கை தற்போது பிறந்துள்ளது.

இ. இராமையா
பதுளை.

**வாசகர்களே! இப்பத்திரிகையில் வெளியிடப்படும் கருத்துக்கள் பற்றி உங்கள் கருத்துக்களை விளக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படையாக எழுதுங்கள். அவற்றை ஏற்றுக் கொள்ள தர்க்கீகம் தயாராக உள்ளது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத்தில் குடியேற்ற முறைகளும் ஆபத்துக்களும் - பொது நோக்கு

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சிங்களக் குடியேற்றப் பிரச்சினை நீண்ட காலமாக உணரப்பட்ட ஒன்று. ஆயினும் இதனை 'குடியேற்றப் பிரச்சினை' என்று வெறுமனே இரு சொற்களின் சேர்க்கையாகப் பார்த்து, கட்சி அரசியல் வாதிகளைப் போல் மேடைப் பிரசங்கமுடன் முடங்கி விடுவதில் பயனேதுமில்லை. மாறாக அதன் பரிணாமங்களைப் பகுத்துப் பார்த்து, எவ்வளவு தூரம் இது பரந்திருக்கின்றதென்பதையும் அதன் ஆணி வேரையும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றைய கால கட்டத்தில் அவசியமானதாகும். இதுவே இப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் முதற்படியாக அமையும். இப் பத்திரிகையின் 12-வதுஇதழில் திருமலை மாவட்டத்தில் உள்ள குடியேற்றம் பற்றி தனித்துப் பார்க்கப்பட்டிருந்தது. இங்கு தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் கருத்திலெடுக்கப்பட்டு, பொது நோக்காக இப் பிரச்சினை வெளிப்படுத்தப்படுகிறது.

இலங்கையில் ஆட்சி புரிந்து வந்ததும், வருவதுமான அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் சீரழிந்து செல்லும் இச் சமூக கட்டமைப்பை பாதுகாத்து வளர்க்க வேண்டுமென்ற மனப்பால் பருகியதும் பருகிக்கொண்டிருப்பதும் வழக்கமான நிகழ்வுகள் இந்த அரசாங்க காவலர்கள் இம் முதலாளித்துவ சமூக அமைப்பைப் பாதுகாக்க இனக்குரோத நடவடிக்கைகளில் தாராளமாக இறங்கியதும், இறங்கி வருவதும் வெட்ட வெளிச்சமான ஒன்றே. இத்தகைய அவசியத்தை உடைய இனக்குரோத நடவடிக்கைகளின் ஒன்று குவிந்த நிலையை நாம் சிங்களக் குடியேற்றங்களில் இலகுவாகக் காணலாம்.

## குடியேற்ற முறைகள்:

1935–ம் ஆண்டு டி.எஸ் சேனநாயக்கா தலைமையிலான ஐ.தே கட்சியின் காலத்தில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடியேற்றத் திட்டங்களுக்கான சட்டபூர்வ அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போதெல்லாம் 'விவசாயக் குடியேற்றம்' என்ற போர்வை ஒன்றைப் பயன்படுத்தியே சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டு வந்தன. ஆனால் காலப் போக்கில் தமிழ் பேசுவோர் மீது வசைமாரி பொழிவதிலும், அவர்களை அடக்கி ஒடுக்குவதிலும் போட்டி போட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் குடியேற்றங்களை வேறு வகையிலும் அமுலாக்கத் தொடங்கின. இந்த வளர்சிப் போக்கை நுணுக்கமாக அணுகும்போது, பிரதானமாக ஏழு வகையான குடியேற்ற நடவடிக்கைகளை கருத்திலெடுக்கலாம்.

(1) விவசாயக்குடியேற்றம்
(2) தொழிற்சாலைக் குடியேற்றம்.
(3) அரச நிர்வாகிகள் ஊழியர்கள் குடியேற்றம்
(4) மீன்பிடிக் குடியேற்றம்
(5) மாற்றுப் பயிர்ச் செய்கைத் திட்டக் குடியேற்றம்
(6) நாடுகடத்தப்பட்ட மலையக மக்களின் இடங்களில் ஏற்படுத்தப்படும் குடியேற்றம்
(7) புனித நகர்த் திட்டம்

இவை 'நாட்டு அபிவிருத்தி' 'மதப் பாதுகாப்பு, என்ற சொற்பதங்களால் கவசமிடப்பட்டிருக்க, அவற்றின் உண்மைச் சொரூபம் தமிழ் பேசும் பாமரர்களினதும், தொழிலாளர்களினதும் பிரதேசங்களை அபகரிப்பதாயும், பௌத்த மத விஸ்தரிப்பை ஏற்படுத்துவதாயும் அமைந்திருக்கிறது. இவ் உண்மைச் சொரூபத்தையே இப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் புள்ளிவிபர அட்டவணையும் வரிப்படமும் உறுதிப்படுத்துகின்றன.

அரசாங்கம் குடியேற்றக் காரர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் நிலை கொண்டிருக்கும் வகையில், போதிய வசதிகளையும் வாய்ப்புக்களையும், பாதுகாப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவ்வேற்பாட்டின் துணையுடன் தனது இலக்கை, தமிழ்பிரதேசங்களில் சிங்களவரினது எண்ணிக்கையை அதிகரிப்பதன்மூலமும், அவ்விடங்களிலும் அதனைச்சூழவும் சிங்கள ஆதிக்கத்தை ஏற்படுததுவதன் மூலமும் அடைய முற்படுகிறது.

## விவசாயக் குடியேற்றம்:

நீண்டகாலமாக அமுலில் இருந்து வரும் விவசாயக் குடியேற்ற திட்டங்கள் இன்று முக்கியமாக மூன்று பிரிவுளாக உள்ளன.

(1) மகாவலி கங்கைத்திட்டம்
(2) மதுறு ஓயாத்திட்டம்.
(3) வடமத்தியமாகாண ஆற்றுத் தொகுதிகளை உள்ளடக்கிய திட்டம்.

இத்தகைய திட்டங்களின் கீழ் சுமார் 700 பேரைக் கொண்ட கிராமங்கள் உருவாக்கப் படுகின்றன. ஒரு கூட்டமைப்பு சுமார் 400–500 குடும்பங்களை உள்ளடக்கி இருக்கும். இவற்றில் சராசரியாக 5,000 பேர்வரை இருப்பர். இப் பிரதேசங்களில் தபாற் கந்தோர், பாடசாலை, பொழுது போக்கு மையம், கூட்டுறவுக்கடை, வைத்தியசாலை, உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் ஆகியன அமைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் இப்பிரதேசங்கள் பெரும் தெருக்களை மருவியும் ஏனைய சிங்களப் பகுதிகளுடன் நேரடியாக தொடர்பு படும்படியும், தமிழ்ப் பிரதேசங்களைக் கூறு போடும் வகையிலும் அமைந்திருக்கும்.

இத்தகைய திடமானதிட்ட அமைப்புகளிலான குடியேற்ற காரர்கள் அயலில் உள்ள கிராம வாசிகள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாக குறிப்பாக நீர்ப்பாய்ச்சல் ஆதிக்கத்தை தமது கைகளில் எடுத்துக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக முப்படையினரது பெருந்துணையும் கிடைக்கப்பெறுகிறது.

இத்தகைய குடியேற்றத் திட்டங்களுக்கு அந்நிய நாட்டு உதவி தாராளமாகக்கிடைத்து வருவதை யாவரும் அறிவர். அமெரிக்கா, பிரித்தானியா, நெதர்லாந்து, கனடா போன்ற நாடுகளும் முதலாளித்துவ நாடுகளால் ஸ்தாபிக்கப்பட்ட உலக வங்கியும் இவற்றிற்கு உதவி புரிந்து வருகின்றன. இந்நாடுகளில் இருந்து வந்த சிலர் குடியேற்றத் திட்டங்களைப் பார்த்துவிட்டு அரசைப் புகழ்ந்து பேசிய சந்தர்ப்பங்களும் உண்டு.

## தொழிற்சாலைக் குடியேற்றங்கள்

அரசாங்கங்கள் தொழில் ரீதியாகத் தமிழ் பேசுவோரை ஒதுக்கிச் சிங்களவர்களை ஓங்கச் செய்து வருவதனல் தொழிற்சாலைகளில் தமிழ் பேசுவோரின் எண்ணிக்கை குறுகி வருகிறது. இன்றுதமிழ்பிரதேசத்திலுள்ள பாரியதொழிற்சாலைகளில்அரச நிர்வாகிகளும்,பெரும்பாலான ஊழியர்களும் சிங்களவர்களே தொழிற்சாலைச் சூழலில் குடும்ப சகிதம் குடியேறி நாளடைவில் நிரந்தரமான சம்பவங்கள் திருகோணமலை, அம்பாறை, மட்டுநகர் மாவட்டங்களில் நிறைய உண்டு. தொழிற்சாலைகளில் சிங்கள நிர்வாகி நியமிக்கப்பட்டிருப்பதானது, அரசின் ஆதிக்கத்தை இவ்வாலைகளில் ஓங்கச் செய்யும் நடவடிக்கையாக விளங்குகிறது.

## மலையகக் குடியேற்றங்கள்

மலையகப் பகுதிகளில் 'நட்சா' எனப்படும் ஸ்தாபனம் மூலம் மாற்றுப் பயிர்ச் செய்கைத் திட்டத்தை 1978 முதல் ஆபம்பித்து சிங்களவர்களைக் குடியேற்றம் செய்து வருகின்றனர். இது தவிர இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்ட மலையக மக்களின் இடங்களில் சிங்களவர்களே குவிக்கப்படுகின்றனர். மலையகப்பகுதிகளில் பொதுவாக மலையின் அடிப்பாகத்தைச் சுற்றியே இத்தகைய குடியேற்றங்கள் செய்யப்படுகின்றன. மலையகத்தில் குடியேற்றப்பட்ட முறையை நோக்கும் ஒருவர் மலையக தமிழ் பேசும் மக்கள் சிங்களவர்களால் சுற்றி வளைக்கப்பட்டு சிறைப்பிடிக்கப் பட்டிருப்பதாக உணர்வார்.


இதுவரை குறிப்பிடப்பட்டு வந்த வகைகளில் நடைமுறையில் இருக்கும் குடியேற்றங்கள், தமிழ் பேசுவோரின் வளங்களை அபகரிக்கவும் தேவை ஏற்படும்போது இனக் கலவரங்களைச் சுலபமாகத் தூண்டிப் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கவும் தளமாக அமைகின்றன. இங்கு காட்டப்பட்டிருக்கும் வரிப்படத்தை நோக்கும்போது தமிழ்ப் பிரதேசங்கள், கரையோரக் குடியேற்றங்களாலும், விவசாயக் குடியேற்றங்களாலும் சுற்றி வளைத்து நெருக்கப்பட்டு திருகோணமலையினூடாகப் பிளக்கப்பட்டுச் சின்னாபின்னமாக்கப்படுவதை உணர முடிகிறதல்லவா?

## எதிர்காலம்

ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் இனவாதம் பேசியும், தமிழ் தேசிய இனத்தைப் பல முனைகளிலும் அடக்கி ஒடுக்குவதன் மூலமும் தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி வருகின்றன. முதலாளித்துவ அமைப்பை நிலைத்திருக்கச் செய்ய அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய இனக்குரோத நடவடிக்கைகளின் வரிசையிலேயே சிங்களக் குடியேற்றமும் அமைகிறதெனக் கண்டோம். இதனல் சிங்களக் குடியேற்றங்களின் ஆணிவேர் இச்சமூக அமைப்பாக விளங்குகிறது. ஆகையால் சமூக அமைப்பை மாற்றுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளே குடியேற்றங்களுக்கும் முடிவு கட்டுமென்ற முடிவுக்கு வரவேண்டியதாகிறது. இந்த வகையில் அமைய வேண்டிய குடியேற்றத்திற்கான தீர்வை சீரணிக்க முடியாதவர்கள் யானை பார்த்த குருடர்களே!

நாட்டில் சர்வ வியாபகமாக இருக்கும் தமிழ் — சிங்கள மொழிவாரி அடிப்படையிலான இடையறுத உட்பூசல்களை—முரண்பாடுகளை—கணக்கிலெடுக்கும்போது இலங்கையில் சமூக மாற்றத்தை முதலில் ஏற்படுத்தும் வல்லமை தமிழ் பேசுவோரிடமே இருக்கிறதென்பது வெளிப்படையானதாகும். இதனலேயே தமிழ் பாட்டாளிகளின் ஈழப் போராட்டம் சிங்களப் பாட்டாளிகளின் விமோசனத்திற்கான முதற்படியாக அமைகிறதென்கிறோம்.

**இந்த வரிப்படத்தில் விவசாய, மீன்பிடி தொழிற்சாலை ஆகியவற்றுடன் தொடர்புபட்ட குடியேற்றங்களே காட்டப்பட்டுள்ளன. இதில் தடித்த கறுப்புக் கோட்டினல் அடைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் விவசாயக் குடியேற்றங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. அரசாங்கங்களினல் திட்டமிட்டு நடாத்தப்பட்டு வரும் இத்தகைய குடியேற்றங்களில் சிங்களவர்களே அதிகப் பெரும் பான்மையினராவர்-**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பின்வாங்கும் அமெரிக்கா !

இறுதியாக நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் றீகன் பெருவெற்றி கண்டபோது அமெரிக்க முதலாளித்துவம் மட்டுமல்ல அகில உலகிலுமுள்ள முதலாளித்துவமே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. மரணப் படுக்கையில் இருக்கும் முதலாளித்துவத்தைப் புத்துயிர் கொடுத்து, அமெரிக்க ஏகாதிபத்தியம் அரசோச்சும் என அவை மனப்பால் குடித்தன. அதற்கு ஏற்றாப்போலவே றீகனும் நமது வெள்ளித் திரைகளில் மின்னும் கதாநாயகன் போல் நடித்தார். இது குறித்துத் தர்க்கீகம் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டியது. அவர் முழங்கியவற்றைத்தொகுத்தால்,

(1) உலகெங்கும் மனிதஉரிமைக்காக (ஜிம்மி கார்டரைவிட) போராடும் மாவீரன் ஆதல்

(2) அமெரிக்காவின் அழுகும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பல்,

(3) உலகில் ஆயுதப் பெருக்கத்திற்குச் சோவியத்தே காரணம். எனவே அதற்கு எதிரான கடும் நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் அமெரிக்காவை இராணுவத்துறையில் தலை வல்லரசாக்கல்,

(4) உலகின் பிரதான விடுதலை இயக்கமான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாதிகள் கூடாரமெனக் குறிப்பிட்டு சியோனிச இஸ்ரேலிற்குத் துணைநிற்றல்.

(5) இலத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு ஆபிரிக்கா தென்கிழக்காசியாப் பகுதிகளில் வீழ்ந்துவரும் அமெரிக்க செல்வாக்கை நிலைநிறுத்தல்

இவ்வாறு சொல்லிய வாக்குறுதிகளின் கதி என்ன?இன்று நடப்பதென்ன ? அமெரிக்க வாக்குறுதிகள் நம்பத்தகுந்தவை அல்லஎன்ற எண்ணம் இன்று 'நேற்றோ' நாடுகளில் கொள்ளும் அளவுக்கு றீகனின் நிலை மோசமாக உள்ளது. இயங்கியல் முற்றிலும் விஞ்ஞானபூர்வமானது. அதன் வரலாற்று வழிவந்த தர்க்கரீதியான முடிவுகள் எத்துணை உண்மை என்பது நிதர்சனமாகிவிட்டது.

## பொருளாதாரம்

கடந்த பத்தாண்டுகளாக அமெரிக்காவின் வர்த்தக நிலுவை மோசமான நிலையை அடைந்துள்ளது. இவ்வருடம் இவ்வர்த்தக நிலுவைப் பற்றுக்குறை 42·4 மில்லியன் டொலர் பொருளாதார மந்தநிலை (Recession) தொடர்கிறது, றீகனால் இதை மாற்றமுடிந்ததா என்பதே கேள்வி. சில கஷ்டங்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது என ஜனாதிபதி றீகனே ஒப்புக்கொண்டதோடு அமெரிக்க பொருளாதாரத்தைப் புள்ளி விபரங்களின் உண்மைபற்றியே சந்தேகம் கொள்ள வேண்டிய அபாக்கியநிலை ஏற்பட்டுள்ளது. மிக அண்மையான விபரப்படி வேலையற்றோர்வீதம் முன்னெப்போதும் இல்லாத அளவு 8·4 வீதமாகியுள்ளது. ஏறத்தாழ 9 மில்லியன் மக்கள் வேலையற்றிருக்கின்றனர். நீக்கிரோக்களிடையே வேலையற்றோர் வீதம் கூடுதலாக 16 7 வீதமாக இருப்பது வேறு கண்ணோட்டத்தில் நோக்கவேண்டிய விடயம்.

இவற்றைவிட அமெரிக்க பாரிய கைத்தொழிற்துறை பெருத்த அபாயங்களை எதிர்நோக்குகிறது. பாரிய கைத்தொழில்கள் பய உற்பத்திக் குறைப்பு ஊழியர் வேலைநீக்கம் போன்றவற்றிலும் பல சிறு கைத்தொழில்கள் மூடவேண்டிய அபாயமும் ஏற்பட்டுள்ளது. பல மூடப்பட்டும் விட்டன. இதனாலேயே அமெரிக்கா இம்முறை வெளிநாட்டு உதவித் திட்டங்களில் கைவைக்க ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுதவிகளில் பெருவெட்டு செய்தது மாத்திரமன்றி கல்வி, கலாச்சார உதவித் திட்டங்களுக்கான தொகையில் பெருவெட்டுச்செய்ய வேண்டியதாயிற்று, புல் பிரைட் (Full Bright), கம்ரி (Humbrey) உதவித் திட்டங்கள் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகிவிட்டன. அமெரிக்க சர்வதேச தொடர்பு நிலையத்திற்கு (International Communication Agency) 12 சதவீத வெட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இதுபற்றி நியூயோர்க் டைம்ஸ்(Newyork Times)தெரிவிக்கையில், உலகில் அமெரிக்க கல்வி. கலாச்சார பிரதிபலிப்புப் பெரும்பாதிப்பு அடையும் அபாயம் றீகனின் நடவடிக்கையில் தோன்றியுள்ளது என எச்சரித்துள்ளது, அதுமட்டுமன்றி (Immediate Gain but Lossin Long Run) எனவும் பெருமூச்சுவிட்டுள்ளது. தனது கீர்த்தியைக் காப்பாற்றப் பெருமளவில் செலவிடும் இத் திட்டங்களிலேயே அமெரிக்கா கைவைக்க நினைப்பதிலிருந்து அமெரிக்க பொருளாதார நிலையை எவரும் புரிந்துகொள்ளலாம்.

## மனித உரிமை

மனித உரிமைகள் பற்றியும் (அண்மையில் போலந்தில் நிகழ்ந்தவைபற்றியும்) அதிகம் அலட்டிக்கொள்ளும் றீகன் நிர்வாகத்தின் உண்மைச் சொரூபம் மிகவும் பயங்கரமானது. ஜனநாயக் ரீதியில் மக்கள் போராட்டத்தின்பின் உருவாக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா படும்பாடும், அதற்கு விலையாகத் தமதுயிரை ஈயும் விடுதலைப் போராளிகள் பற்றியும் அண்மையில் அமெரிக்க பத்திரிகைகளிலேயே பிரமிக்கும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

(1) எல்சல்வடோரில் 1979 அக்டோபருக்கும் 1981 யூலைக்குமிடையில் 25051 மக்கள் அமெரிக்க ஆதரவு இராணுவ ஆட்சியால் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

(2) அமெரிக்க ஆதரவோடு இயங்கும் துருக்கிய இராணுவ ஆட்சியில் அண்மையில் இறந்த ஜனநாயகவாதிகள், மாணவர்கள், தொழிற் சங்கவாதிகள் பலர்.

(3) தென்கொரியாவில் இன்னமும் சிறையிலிருக்கும் போராட்ட வீரர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலர்.

(4) சிலியில் சர்வாதிகாரி பினசெட்டின் வெறியாட்டத்திற்கு உதவியாயிருத்தல்.

(3) அங்கோலாவின் சட்டபூர்வமான (MPLA) அரசிற்கு எதிராகப் போராடும் தென்னாபிரிக்க ஆதரவான (UNITA) விற்கு உதவியளித்து ஏதுமறியா அங்கோலா மக்களைக் கொல்லல்.

(6) உலகின் பயங்கர இனவாத நாடான தென்னாபிரிக்காவிற்கு ஆதரவாக இருந்து நமீபிய விடுதலைக்கு இடராக இருப்பதோடு, ஆபிரிக்க மக்களின் விடுதலை உணர்விற்கே அச்சுறுத்தலாக இருத்தல்.

(7) இவை எல்லாவற்றையும் விட சியோனிச இஸ்ரேலுக்கு ஆயுதங்களைத் தங்குதடையின்றி வழங்கி மேற்கு ஜோர்தான் கரையோரத்தில் தொடர்ந்தும் இஸ்ரேலிய குடியேற்றங்களை உருவாக்கல். கோலான் மேட்டுநிலப் பகுதியை இணைத்தல். இவையனைத்தும் சர்வதேச ஜெனீவா உடன்பாட்டிற்கு முற்றிலும் எதிரான அமெரிக்க நடவடிக்கைகளே !

போலந்தின் தொழிலாளர்களுக்காகக் கண்ணீர் வடிக்கும் றீகன், இவ்வருடம் ஆகஸ்டில் அமெரிக்க விமானநிலையக் கட்டுப்பாட்டாளர்கள் சுமார் 11,000 பேருக்கு மேல் 48 மணித்தியாலத்திற்குள் வேலையிலிருந்து நீக்கியமை எதைக் காட்டுகிறது.

சோவியத்தின்மீது அடிக்கடி சீறிப் பாயும் றீகன் நிர்வாகம் இன்று பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்துள்ளது. ஜெனிவாவில் நடுத்தர அணுவாயுதங்களைக் கட்டுப்படுத்தும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள உடன்பட்டதோடு அடுத்த வருடம் பிரஷ்நேவையும் சந்திக்க உடன்பட்டுள்ளார். சோவியத்துடன் ஏற்கனவே உள்ள SALT உடன்பாட்டைத் தவிர Start (Strate-gic Arms Reduction Talks) எனப்படும் புதிய முறையிலான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க அமெரிக்கா ஒத்திருக்கிறது. இதனை உலக அமைதி கருதி நாம் வரவேற்கின்றோம்' அதேசமயம் இவற்றிலுள்ள சில வேடிக்கைகளை நாம் குறிப்பிட விரும்புகிறோம். இதுவரையும் "சோவியத் பூச்சாண்டி.' காட்டி நேற்றோ நாடுகளை தன் கைக்குள் வைத்திருக்க அமெரிக்கா முயன்று வந்தது. சோவியத்புதிதாக SS 20 நடுத்தர ஏவுகணைகளை மேற்கு ஐரோப்பாவில் அமைக்கப்போவதாகக் கூறித் தனது நியூட்டன் குண்டுத் திட்டத்திற்கு அமெரிக்கா ஆதரவு தேடியது. மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தனது நடுத்தர ஏவுகணைகளைக் குவிப்பதற்கு இதைச் சாட்டாகப் பயன்படுத்தியது. இதனை இன்று மேற்கைரோப்பிய நாடுகள் உணர்ந்துவிட்டன மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்க அணுவாயுத பரம்பலுக்குப் பலத்த எதிர்ப்பு அண்மையில் ஏற்பட்டன. இவற்றைவிடப் புதிய திருப்பம் ஒன்றும் ஏற்பட்டுள்ளது. இதுவரை சோவியத்துடன் பேச்சு வார்த்தையிலீடுபட மறுத்த அமெரிக்கா இன்று உடன்பட்டு நிற்பது நேற்றோ நாடுகள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது, தங்களுடைய நாடுகளை அணுவாயுதங்களை நிரப்பும் கிடங்குகளாக்கி அணுவாயுதப்போர் ஏற்பட்டால் தான் தப்ப அமெரிக்கா முயல்கிறது என்ற கருத்து வேகமாகப்பரவுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றார்கள். அது மட்டுமன்றிப் போலந்திற்கு எதிரான தடைமுயற்சி "வீண் தலையீடு" என்று அமெரிக்க விசுவாசிகளே நம்பும்அளவிற்கு றீகன் மூடத்தனமாக நடப்பது உலகறிந்த விடயம்.

இவை போலவே மத்திய கிழக்கு நெருக்கடிகளிலும் அமெரிக்காவின் போக்குஅதன் நேச நாடுகளிடையிலேயே சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. எனவே பொதுமட்டாக நோக்குமிடத்து அமெரிக்கா விட மிருந்து எல்லாமே கை நழுவிப்போவது புரியும். அந்தோடு தத்துவ வித்தகனின் தர்க்கீக முடிவும் விளங்கும்.

# அமெரிக்கக் குழந்தையின் கோலான் குன்றிணைப்பு

மத்திய கிழக்கின் நீண்டகாலப் பிரச்சனைக்கு மூலகர்த்தாவாக விளங்கி வரும் சியோனிச இஸ்ரேல், தனது ஆக்கிரமிப்பு பிரகடனத்தின் மூலம் நெருக்கடிகளுக்கு மேலும் தூபம் இட்டு வருகின்றது. பாலஸ்தீன நாட்டை முழுக்க முழுக்க ஆக்கிரமித்து கொண்டு அந்நாட்டை இஸ்ரேல் என மாற்றி அமெரிக்க வல்லரசின் செல்லப் பிள்ளையாக மத்திய கிழக்கில் பலம் பொருந்திய வல்லரசு நாடாகத் திகழ்ந்து வருகின்றது.

1947-ம் ஆண்டில் ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளின் அனுசரணையுடன் பாலஸ்தீனத்தை ஐக்கியநாடுகள் சபை மூலம் பிளவுபடுத்தி யூதர்களின் இஸ்ரேல் நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மனிதாபிமானமற்ற இப்பிரகடனத்திற்கும் மேலாக இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுக்கள் பாலஸ்தீனம் முழுவதையும் தமது படைப்பலத்தின் மூலம் சுவீகரித்துக் கொண்டு பாலஸ்தீனர்களை அடித்து விரட்டினார்கள். அடித்து விரட்டப்பட்ட பாலஸ்தீனர்கள் லெபனானிலும், சிரியாவிலும், ஜோர்தானிலும், எகிப்திலும் அகதிகளாகத் தஞ்சமடைந்து இன்றும் அல்லலுற்று வாழ்கின்றனர்.

பாலஸ்தீன மக்களைக் கூண்டோடு அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுக்கள், தஞ்சமடைந்த நாடுகளினுள்ளும் ஊடுருவத் தொடங்கினர். இதனால் 1967-ம் ஆண்டில் பெரும் யுத்தம் மூண்டது. இதில் சிரியா, ஜோர்தான், எகிப்து ஆகியன கூட்டுச் சேர்ந்து கொண்டன. ஆனால். அமெரிக்க வல்லரசின் செல்லப் பிள்ளையாச்சே இஸ்ரேல். இம் மூன்று நாடுகள்மீதும் கொடூர தாக்குதலை மேற்கொண்டு சிரியாவின் கோலான் (Holan) குன்றுப் பகுதியையும், ஜோர்தானின் மேற்குக் கரைப் பகுதியையும் (West Bank), எகிப்தின் சினாய் (Senai), காஸா (Cazah) பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது,

எகிப்து, தான் இழந்த பகுதிகளை மீட்டுக் கொள்வதற்காக 1979-ம் ஆண்டில் இஸ்ரேல், அமெரிக்க ஆகிய நாடுகளுடன் காம்டேவிட் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இதன் மூலம் அமெரிக்க கூடாரத்தினுள் எகிப்து இழுக்கப்பட்டதே தவிர இழந்த பகுதியை மீள முடியவில்லை. இந்நிலையில் இஸ்ரேலின் பாலஸ்தீனியர்கள்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எல்சல்வடோர் ஏகாதிபத்திய பிடியில் தவிப்பு

# லத்தின் அமெ.காவில் மற்றொரு வியட்னும்!

**எல்சல்வடோர் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் சிக்கித் தவித்து பெரும் அழிவுகளை கண்டு வருகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காட்டு மிராண்டித் தனத்திற்கு உட்பட்டு பெரும் அழிவுகள், இழப்புக்கள் மத்தியில் விடுதலை பெற்ற வியட்னுமைப்போல் எல்சல்வடோர் இன்று இரத்தக்களரிகள், மரண ஓலங்கள் மத்தியில் தவித்து வருகின்றது.**

**பொ**ருளாதார நெருக்கடிகளாலும் சுரண்டல் கெடுபிடிகளாலும் சிக்கித் தவித்து வந்த எல்சல்வடோர் மக்கள் இன்று அந்நிய ஏகாதிபத்திய அடக்குமுறைகளுக்கும் உட்பட்டு அலைதத் தவிடுபொடியாக்க கங்கணங்கட்டித் தமது போராட்டத்தைத் தொடர்ந்தவண்ணமாகவேயுள்ளனா, இற்றைவரை 15,000 மக்களின் இழப்புக்கள் மத்தியில் அவர்கள் தம் போராட்டத்தை நடாத்திய வண்ணமேயுள்ளனர். இந்தநிலையில் அமெரிக்கா தனது இராணுவ உதவிகளையும், அரசாங்க உதவித் தொகைகளையும் மிகப் பெருமளவில் எல்சல்வடோர் அரசாங்கத்திற்கு வழங்கிவருகிறது. 1980ஆம் ஆண்டில் முன்னுள் ஜனதிபதி ஜிம்மி கார்ட்டரினுல் வழங்கப்பட்ட 64.9 மில்லியன் டொலர் உதவியில் 5.9 மில்லியன் டொலர் இராணுவ உதவியை. பின்னர் [illegible] றீகன் நிர்வாகம் 117.2 மில்லியன் டொலர் உதவியுடன் 26 மில்லியன் டொலர் இராணுவ உதவியாகவும் அதிகரிக்கப்பட்டது. ஆனுல் தற்போது 380 மில்லியன் டொலர் உதவிகளை வங்கிகளினூடாகவும், எல்சல்வடோர் அரசுக்கு நேரடியாக 523 மில்லியன் டொலர் உதவியாகவும் றீகன் நிர்வாகம் வழங்குகின்றது. இத்தகைய அமெரிக்க உதவிகள் மத்தியில் அந்நாட்டில் பொருளாதார வீழ்ச்சி நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமேயுள்ளது.

இத்தகைய நெருக்கடிகளில் தவிக்கும் அம் மக்களின் வரலாற்றையும் சற்றுப் பார்ப்போம். பொருளாதார வளர்ச்சியிலும், சனத்தொகைப் பெருக்கத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த மத்திய அமெரிக்க நாடுகளில் 16ஆம் நூற்றுண்டுகளில் ஸ்பெயின் (Spain) குடியேற்றம் இடம்பெற்றது, இதனுலேயே லத்தின் அமெரிக்க நாடுகளில் வாழும் பெரும்பாலான மக்கள் ஸ்பானிய மொழியையே பேசிவருகின்றனர். அந்தக்காலகட்டங்களில் ஸ்பெயின், குடியேற்றங்களை விஸ்திரப்படுத்தியதே தவிர பெருமளவிலான பொருளாதார சுரண்டலையோ அன்றி தொழில்துறைவளர்ச்சியையோ ஏற்படுத்தவில்லை. காரணம் அவர்களது மொழி, கலை, கலாச்சாரம் என்பனவே அவர்களுக்கு முக்கியத்துவமாக இருந்தது. ஆயினும் அந்நாடுகளின் மூலவளங்கள் சிலவற்றை பண்டமாற்றீடுசெய்தனர் என்பது உண்மை. இந்த ஸ்பெயின் காலனியாதிக்கத்தின் வளர்ச்சிப்போக்கு ஏனைய காலனியாதிக்கங்களின் வளர்ச்சிப்போக்கோடு பிணைந்தே இருந்தது. இந்தநிலையில் அமெரிக்காவின் வளர்ச்சிப் போக்கும், மற்றும் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் வளர்ச்சிப்போக்கோடு ஈடுகொடுக்கமுடியாத ஸ்பெயின் தனது காலனியாதிக்கத்தைக் கைவிடத் தொடங்கியது. இதனுல் 1821ஆம் ஆண்டளவில் மத்திய அமெரிக்கநாடுகளிலிருந்து ஸ்பெயின் சுதந்திரம் வழங்குவதாகக் கூறிவிட்டு பின்வாங்கிக்கொண்டது.

இத்தகைய காலகட்டங்களில் எல்சல்வடோர் தனியான நாடக இருக்கவில்லை. அருகாமையிலுள்ள நாடான குவாத்தமால (Quatemala) வுடன் இணைந்தே இருந்தது. பின்னர் 1814ஆம் ஆண்டளவில் குவாத்தமாலாவிடமிருந்து பிரிந்து தனியான நாடாக உருவாகியது. இதற்கு எல்சல்வடோரிலிருந்த நிலச்சுவாந்தர்களே காரணர்களாக இருந்தனர். இப்போது அந்நாட்டின் பொருளாதாரவளம் பின்தங்கியே இருந்தது. ஆயினும் அந்நாட்டில் மூலபொருளாதாரமாக கோப்பி விளங்கியது. இதைச் சரிவர உற்பத்திசெய்து பொருளாதார வளத்தை முன்னேற்ற உள்ளூர் நிலச்சுவாந்தர்களினுல் முடியவில்லை.

ஆயினும் காலப்போக்கில் சனத்தொகைப் பெருக்கம் பொருளாதாரத்துறையில் மந்தமான வளர்ச்சிப் போக்கை ஏற்படுத்தியது. இந்நிலையில் அந்நிய முதலாளித்துவ ஏகாதிபத்திய வளர்ச்சிப்போக்கு எல்சல்வடோரினுள்ளும் தலைவைக்கத் தொடங்கியதன் விளைவாகவே பல நாடுள்கள் எல்சல்வடோரினுள் மூலதனமிட முன்வந்தன. 1965ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட மிகப் பெரிய பூகம்பம் தலைநகரான சான்சல்வடோர்(Sansalvador) பகுதியை பெருமளவில் சேதப்படுத்தியது. இதனைக் கருவியாகப் பயன்படுத்திய அந்நிய முதலாளித்துவ நாடுகள் உதவிகள் செய்வதான உத்திகள் மூலம் எல்சல்வடோரினுள் மிக வேகமாக ஊடுருவத் தொடங்கின. இதில் முக்கிய



அமெரிக்க ஆதரவுடைய ராணுவ சர்வாதிகார ஆட்சியினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில்

அங்கம்வகித்தது அமெரிக்காவே. இத்தகைய அந்நிய ஊடுருவலுக்கு எல்சல்வடோர் அதிகாரத்தைக்கொண்ட நிலச்சுவாந்தர்கள், இடமளித்து மூலதனமிடவும், கம்பனிகளை நிறுவவும் வழிவகுத்தனர்.

இதற்கிடையில் 1939ஆம் ஆண்டில் ஏற்பட்ட விவசாயிகள் போராட்டம் அன்றைய நிலப் பிரபுத்துவ அரசைக் கதிகலங்க வைத்தது. இதனுல் இராணுவம் மக்கள்மீது பயங்கரத் தாக்குதல்களை தொடுத்துப் பலரைக் கொன்று குவித்து இராணுவ சர்வாதிகாரம் ஏற்படுத்தப்பட்டது.

எல்சல்வடோரில் பெருமளவிலான விவசாய நிலங்கள் குறிப்பிட்ட சில நிலப்பிரபுத்துவர்களின் சொத்துடைமையாகவேயிருந்தது. அதாவது கிட்டத்தட்ட 14 நிலப்பிரபுத்துவ குடும்பங்களின் கைகளிலேயே அந்த நாட்டின் தலைவிதி அடங்கியிருந்தது. எனவே அங்கு ஏற்பட்ட சனத்தொகை வளர்ச்சி மக்களை மேலும் வறுமை நிலைக்கே தள்ளியது. இதனுல் அடிமைகளாக கூலி வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களாக சுரண்டலுக்குட்பட்டு வாழ்க்கைபூராவும் சிக்கித் தவித்தனர்.

இந்த நிலையில், அங்கு ஏற்பட்ட அந்நிய நாடுகளின் தொழில் நுட்பத்துறை வளர்ச்சி முதலாளித்துவ வளர்ச்சிப்போக்குக்கு இட்டுச் சென்றது. பல்தேசியக் கூட்டுத்தாபனங்களும், நிறுவனங்களும் உரமாக வேரூன்றி அங்குள்ள அரச குடும்பத்தினரின் ஆட்சிக்கு உறுதுணையாகவும் விளங்கியதோடு வெளிநாடுகளின் உற்பத்திப் பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்டு அங்கு வாழும் மக்களைப் பெரும் பொருளாதார இன்னல்களுக்குள்ளாக்கியது.

இத்தகையநிலையில் இன்னல்களுக்குள்ளான மக்களின் எழுச்சி நாளுக்குநாள் வலுவடையத் தொடங்கியது. அங்கு பல கட்சிகளும் குழுக்களும் தோன்றத்தொடங்கின. ஆனுல் அங்கிருந்த கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பத்தில் பலமிக்கனவாய் இருந்தது. பின் செயற்திறனற்றதனுல் வலுவிழந்தது. இதனுல் பல கட்சிகள் உதயமாகின. அவற்றில், தேசிய சமாதான கட்சி (P.C.N.–Partido de Concilacion, Nacional)கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி(P. D. C.–Partido dela Democracia Cristians), தேசிய ஜனநாயக சங்கம் (U. D. N.—Union Democracia Nacionalista), தேசிய விடுதலை இயக்கம் (M. N. R.—Movimınto Nacional Revolucionario) என்பன உருவாகின. இவையனைத்தும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் எழுப்புபவர்களாக மட்டுமே இருந்தனர். ஆனுல் போராட்டங்களை நடாத்துவதற்கான இயக்கங்களாக ;– மக்கள் விடுதலைப்படை (E. R. P.—Ejercito Revolucionario d. Pueblo), மக்கள் விடுதலைமுன்னணி (F. P. L.—Frente Popular de Liberacion), தேசிய தடுப்பு முன்னணிப் படை (F. A. R. N.—Frente Armado delaResistencia Nacional) மக்கள் ஐக்கிய நடவடிக்கை படை (F. A. P. U.—Frente de Accion Popular Unificada) ஆகியன செயற்படத் தொடங்கின. இவைதவிர சிறுசிறு குழுக்கள் பலவும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கின.

இத்தகைய முதலாளித்துவ அரசாங்கத்தையும் அடக்குமுறைகளையும் எதிர்த்து வலுப்பெற்றுவந்த போராட்டத்தை அறவே துடைத்தொழிக்கும் வகையில் அமெரிக்க உதவியுடன் எல்சல்வடோர் அரசாங்கம் இறங்கி பொதுமக்கள் பலரை நடு வீதிகளிலும், கோவில்களிலும், தொழிற்சாலைகள் முன்பும், வீடுகளிலும் சுட்டுக்கொன்றது. இத்தகைய நடவடிக்கைகள் 1955ஆம் ஆண்டிலிருந்து உக்கிரமடைந்து இதுவரை 15,000 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நெருக்கடிகளின் நிமித்தம் அங்குள்ள இயக்கங்கள் ஐக்கியமுன்னணி முயற்சியில் ஈடுபட்டன. இதனுல் 1980 டிசம்பர் மாதத்தில் Revolutionary Mass Coordinating Body (C. R. M.) உருவாக்கப்பட்டு முக்கிய தலைவர்கள் போராட்டம் பற்றி கலந்துரையாடினர். முக்கியமான 4 இயக்கங்கள் கையொப்பமிட்ட பிரகடனமொன்று எல்சல்வடோர் மக்களுக்கு விடுக்கப்பட்டு, ஆயுதப் போராட்டத்திற்கான உந்துதல் வழங்கப்பட்டது. கிறிஸ்தவ ஆலயங்களிலும், பொது வைபவங்களிலும் எதிர்ப்புப் பிரசாரங்கள் வலுப்பெறத் தொடங்கின. இதனுல் அதிர்ச்சியடைந்த அரசாங்கமும் அமெரிக்காவும் தமது நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திக் கொண்டனர். இதன்விளைவாக கூட்டிணைப்பு இயக்கங்களின் தலைவர்கள் நடாத்திய கலந்துரையாடல் கூட்டம் ஒன்றினுள் படையினர் திடீர் தாக்குதல் நடாத்தி அறுவரைச் சுட்டுக் கொன்றனர் இதனுல் மேலும் நிலைமை மோசமடைந்து அடக்கு முறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

எனவே எத்தகைய அடக்குமுறை வழிகளும் ஈற்றில் தவிடுபொடியாக்கப்படுவது நிச்சயமானது என்பதனை வரலாறுகள் காட்டும்வேளையில் எல்சல்வடோர் பாமர தொழிலாள வர்க்கத்தின் எழுச்சி நிச்சயம், அந்த மக்களின் விமோசனத்திற்கு வழிசமைக்கும் என்பது உறுதியானது.

---

## அமெரிக்க...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மீதான தொடர் தாக்குதல் நடவடிக்கை சிரிய — இஸ்ரேல் பகைமை மேலும் வலுக்கத் தொடங்கியது. இத்தகைய நிலையிலேயே இஸ்ரேல் கைப்பற்றிய சிரியாவின் கோலான் குன்றுப் பகுதியை இஸ்ரேல் தனது பிராந்தியமாகப் பிரகடனப்படுத்திப் பகைமையை வளர்த்துக் கொள்வதுடன் நெருக்கடிகளுக்கும் மோதலுக்கும் வழி வகுத்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படையான சாசனங்களுக்கு மாறுன இந்தப் பிரகடன நடவடிக்கைகளை ஐ. நா. வும். ஏனைய நாடுகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எங்களூர்

# நுவரெலியா மக்களும் அவர்களின் வாழ்வும் அவல நிலையும்

இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளதும் வளங்கொழிக்கும் பல தேயிலைத் தோட்டங்களை சுற்றிவரக் கொண்டதுமான நுவரெலியாவில் 60 வீதமான தமிழ் பேசும் மக்களும், 40 வீதமான சிங்கள மக்களும் வாழ்கிறார்கள். இவர்களின் தமிழ் பேசும் மக்களின் மொத்தத் தொகையில் 80 வீதமானோர் இந்தியாவிலிருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டு வந்து குடியேற்றப் பட்டவர்களாவர். ஏனையோர் வியாபார நிமித்தம் வந்து குடியேறிய இஸ்லாமியர்களும், தொழில் வாய்ப்புப் பெற்று வந்து குடியேறியுள்ள வட பகுதியைச் சேர்ந்த மத்தியதர வர்க்கத்தினருமாவர். நுவரெலியா நகரை மையமாகக் கொண்டு சுற்றிவர ஏறத்தாள இருபது இருபத்திரண்டு தோட்டங்கள் வரை உள்ளன. இவை தவிர அரசாங்க விவசாயப் பண்ணைகளும், தொழில் தனியார் கம்பனியான "சிலோன் புரூவரி லிமிட்டட்" என்ற மதுபான உற்பத்திச்சாலையும் ஒன்று உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மற்றும் நுவரெலியாவைப் பற்றிய பிற அம்சங்களைக் குறிப்பிடுவதாயின் விவசாயத் துறையில் அதிக இலாபம் தரக்கூடிய மேல்நாட்டுக் காய்கறிகளின் உற்பத்திக்கு உகந்த இடம் இதுவாகும். அத்துடன் சுற்றுப் பிரயாணிகளைக் கவர்ந்திருக்கும் சொர்க்க புரியாகவும் நுவரெலியா திகழ்கின்றது.

## தொழிலாளர்களும் பிரச்சனைகளும்

இனி இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் பிரச்சனைகள் எப்படிப்பட்டவை என்பது பற்றி ஆராய்வோம். இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையில் 80 சதவீதமானோர் உழைக்கும் பாட்டாளி வர்க்கமாகிய தோட்டத் தொழிலாளிகளே எனக் குறிப்பிட்டுள்ளோம். இவர்களின் வாழ்க்கை முறை பற்றியே இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது அவசியமாகின்றது. இனரீதியில் ஒடுக்கப்பட்டுச் சமூக பொருளாதார அந்தஸ்துக்களில் கீழ் மட்டத்திலேயே இந்தத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் இந்த நிலைக்குக் காரணம் என்ன என்று பார்ப்போமாயின், 1948ஆம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியம் தோட்டத் தொழிலாளர்கள்மீதான நேரடிச் சுரண்டலை விட்டு விட்டு 1948ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறியதன் பின்னர் சிங்களச் சோவனிச முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கையில் நாடு சிக்குண்டதும் இவர்களது பிரச்சனைகளும் ஆரம்பமாகின்றன. தொடர்ந்து 58ஆம் ஆண்டுக் கலவரகாலம் தொடக்கம் படிப்படியாகத் தொடர்ந்து வந்த பல தாக்குதல்களினால் நிலைகுலைந்து போயிருந்த இவர்கள் 77ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர், ஒரு திர்க்கமான முடிவுக்கு வந்துள்ளதைக் காணலாம்.

இத்தகைய நிலை வருவதற்குக் காரணம் யாதெனில், தோட்டங்களில் உதாரணமாக லபுக்கல, ஒலிபன்ட், மஹகஸ்தோட்டை போன்ற தோட்டங்களில் அரசாங்கம் ஏற்படுத்த முயன்றுள்ள குடியேற்றத் திட்டங்களே இவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது என்றே கூறலாம். இலாபத்தில் இயங்கும் இந்தத் தோட்டங்களில் குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்த முனைவதிலிருந்து இந்தத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களைப் பழிவாங்கும் நோக்குடன் திட்டமிட்டுச் செயல்படுகின்றது என்பது தெளிவாய்த் தெரிகின்றது. முதலில் இந்தப் பகுதித் தோட்டங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் நீர்வளம் பேணுதல் என்னும் திட்டத்தில் சில ஏக்கர்களில காட்டு மரங்கள் பயிரிடுவது பழமை வாய்ந்த தேயிலைகளைப் பிடுங்கியபின் மாற்றுப்பயிர் ஏதாவது ஒரு தடவை பயிரிடுதல் வேண்டும் என்ற காரணத்தால் உருளைக் கிழங்கு பயிரிடப் படுகின்றது. பின் நிலம் வெறுமனே சில காலங்கள் விடப்பட்டுப் பின் படிப்படியாகச் சிங்களவர்கள் குடியேற்றப் படுத்தப்படுகின்றனர். இந்த மாதிரிச் சம்பவங்களினால் மனமுடைந்த தமிழ்ப் பேசும் மக்கள் எதிர்காலத்தில் என்ன நிகழுமோ என்ற அச்சத்தில் இடம் பெயர்ந்து செல்லத் துடிக்கின்றனர்.

## வேலை வாய்ப்புக்கள்

இனித் தோட்டங்களில் வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களைப் பற்றிப் பார்ப்போமாயின், தோட்ட அதிகாரிகளும் அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்களும் சுரண்டுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாகும். அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக்கணிப்பினாலும் இந்தப் பகுதி காலங்காலமாக அனுபவித்து வரும் இன்னல்களில் இருந்து விடுபட என்ன செய்ய வேண்டும்? என்ற அங்கலாய்ப்பு ஒவ்வொருவர் மனதிலும் எழுந்துள்ளது. தோட்டப் பகுதிகள் சரிவரப் பராமரிக்கப் படுவதில்லை. இதன் காரணமாகத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆண் தொழிலாளிக்கு மூன்று அல்லது நான்கு நாட்கள், பெண் தொழிலாளிக்கு ஐந்து நாட்களுமே வேலை வழங்கப்படுகின்றது. இதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்துக் கொண்டு பொருளாதார பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. அக்கம் பக்கத்திலுள்ள மரக்கறித் தோட்டங்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்லும் தொழிலாளருக்குத் திரும்பவும் தோட்டங்களில் வேலை மறுக்கப்படுகின்றது. இப்படியாக வேலை மறுக்கப்பட்டு நிரந்தரமாக உதிரிப்பாட்டாளிகளாகி விட்ட பல தொழிலாளர்களை நுவரெலியா வீதிகளில் இன்று காணலாம். சில தோட்டங்களில் பிரஜாவுரிமை இல்லை என்ற நாடற்ற முத்திரை குத்தப்பட்டு வேலை வாய்ப்பு மூலையிலேயே கிள்ளப்பட்டுச் சிலர் அன்றுட பிழைப்புகளைத் தேடி விவசாயத் தோட்டங்களுக்குச் செல்கின்றனர்.

சந்திரன்
நுவரெலியா

## வசதிகளும் கஷ்டங்களும்

இவர்களுக்கு வழங்கப்படும் சுகாதார வசதிகளைப்பற்றிப் பார்ப்போமாயின், 100 வருடங்களுக்கு முன்பு இந்தப் பகுதித் தொழிலாளர்களின் மூதாதையர்கள் எந்த லயன் காம்பராக்களில் குடியேற்றப் பட்டார்களோ அதே லயன் காம்பராக்களிலேயே தற்போதைய தொழிலாளர்களின் வாழ்வும் எதுவித மாற்றமுமின்றித் தொடர்ந்து செல்வதைக் காணலாம். கழிவறை வசதியின்மை, குடிநீர் வசதியின்மை போன்ற எல்லா விதமான சீர்கேடுகளையும் ஏனைய தோட்டத் தொழிலாளர்கள் போன்றே நுவரெலியா பகுதித் தோட்டத் தொழிலாளர்களும் அனுபவிக்கின்றனர். நவீன வீடுகள் என்று சொல்லப் படும் குடில்கள் புதிதாகக் கட்டப்பட்டாலும் உழைத்து உழைத்து உருக்குலைந்து நிற்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை, மாறாகத் தொழிலாளர்களின் உழைப்பை உறுஞ்சுவதற்கு அரசாங்கத்திற்கு உதவும் தோட்ட உத்தியோகத்தருக்கே வழ்ங்கப்படுகின்றது. இந்த நிலை நுவரெலியாப் பகுதித் தோட்டங்களில் மாத்திரமல்ல, எல்லாத் தோட்டங்களிலும் பரவலாக நடப்பதைக் காணலாம்.

## கல்வியும் புறக்கணிப்பும்

நுவரெலியா மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் கல்விநிலை எவ்வாறு உள்ளது என்று பார்ப்போமானால், நுவரெலியாப் பகுதியில் புனித சவேரியார் கல்லூரி, பரிசுத்த திருத்துவக் கல்லூரி, பெண்களுக்கான நல்லாயன் மகளிர் கல்லூரி, நல்லிணைப் பாற்றியார் கல்லூரி என நான்கு பாடசாலைகளிருந்தாலும் பரிசுத்த திருத்துவக் கல்லூரி மாத்திரமே தனித் தமிழ் பாடசாலையாகும். மற்றவையெல்லாம் சிங்கள தமிழ் மாணவர்களை இணைத்துக் கல்வி போதிக்கும் நிலையங்களே. இந்தப் பாடசாலைகளில் அரசாங்கத்தின் இயல்பான கொள்கையான தமிழ் புறக்கணிக்கப்படுவதால் தமிழ் மாணவர்களின் கல்வி நிலை படுமோசமாயுள்ளதைக் காணலாம். இத்தகைய கல்வி புறக்கணிப்பின் மத்தியில் அங்கு வந்து ஆசிரியர் பணிபுரியும் சிலர் அந்தத் தொழிலின் புனிதத்துவத்தைக் கெடுக்கும் வகையில் மாணவர்களை நடத்துவதையும், அவர்களுக்குப் போதிப்பதை ஏதோ ஒருவித கௌரவக் குறைவான செயலாக நினைத்துச் செயல்படுவதையும் அவதானிக்கலாம். இந்த மாதிரியாக நடந்து கொள்பவர்கள் வடபகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் இந்தப் போக்கினால் மலையகத் தோட்டத் தொழிலாளருக்கும், வட கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்களுக்குமிடையிலான உறவு தொடர்ந்தும் பாதிக்கப்படும் நிலை உருவாகின்றது. அது மட்டுமல்லாது, இவர்களின் இந்தப் போக்கினாலும், அரசின் கல்வியமைப்பினாலும் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு அல்லலுறும் பல தொழிலாளர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து படிக்க வைக்க முடியாது மரக்கறித் தோட்டங்களில் வேலை செய்ய அனுப்பி விடுகின்றனர்.

இத்தகைய பல தாக்குதல்களின் மத்தியில் வாழ்ந்துவரும் அந்த மக்களின் மனநிலையைச் சிந்திக்க விடாது முளையிலேயே அவர்களின் போராட்ட உணர்வைக் கிள்ளி விடச் செய்வதில் பல இயக்கங்கள் முளைத்து வருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. சிந்திக்கும் திரணற்ற இந்த மக்களின் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறோம் என்று கூறிக் கொண்டும், ஒற்றுமையையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவோம் என்று கூறிக்கொண்டும் முதலில் மக்கள் மத்தியில் வரும் இத்தகைய இயக்கங்கள் பின்னர் இந்தத் தொழிலாளருக்கு விழிப்புணர்ச்சி என்று கூறிக் கொண்டு கோலாட்டம் அடிப்பதற்கும், கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு போன்று பல துறைகளிலும் சிங்கள சோவனிச அரசினால் இனங்காணப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு வரும் இந்த மக்களுக்கு, அவர்களுக்கு இந்தப் பிரச்சனைகளிலிருந்து விமோசனம் கிட்ட வேண்டுமாயின் சிங்கள மக்களுடன் இணைந்து தம் மதத்தைத் துறந்து தம் இனத்தைத் துறந்து, தாய் மொழியைத் துறந்து அனைவரும் பௌத்த மதத்தைத் தழுவ வேண்டும் என போதித்தும் வருகின்றன. இத்தகைய கைங்கரியங்களில் ஈடுபடும் இயக்கங்களில் சமூக விழிப்புணர்ச்சி மன்றம், இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், செடக் (Se lec) போன்றவை குறிப்பிடத்தக்கவையாம். இத்துடன் மலையக இளைஞர் ஐக்கிய முன்னணி போன்ற சில குழுக்கள் மலையக மக்கள் தனித் தேசிய இனம்! என்ற கோணங்களினூடு மலையக மக்களை மேலும் நிர்க்கதியாக்க முற்பட்டு வருகின்றனர்.

## வழி என்ன?

இத்தகைய பிரச்சனைகள் மத்தியில் வாழும் இந்த மக்களின் வாழ்வில் சுபீட்சம் காண வேண்டுமாயின் இந்த முதலாளித்துவ அமைப்பின் கீழ் உள்ள சமூகத்திலிருந்து விடுபட்டு, ஓர் சமத்துவ சமதர்ம சமுதாயத்தின் கீழ் ஒன்றுபடுதல் வேண்டும். அவர்களின் விமோசனத்தையும் கருத்திற் கொண்டு ஒடுக்கப் படும் தமிழினத்தின் முதுகெலும்பான இந்தப் பாட்டாளி வர்க்கம் தனது உடைமைப் போராட்டத்தைத் தேசிய ரீதியில் ஒட்டு மொத்தமான தமிழ் பேசும் மக்களுக்கான போராட்டமாக இலங்கை வாழ் ஏனைய தமிழ் மக்களுடன் இணைந்து நடாத்துதல் வேண்டும்.

நீங்கள் எழுதும் எங்களூர் கட்டுரைகளில், அடங்கியிருக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்

(1) புவியில் ரீதியிலான அமைப்பு
(2) வாழும் மக்களைப்பற்றிய புள்ளி விபரங்களுடன் கூடிய விபரங்கள்
(3) பிரதான தொழில்களும் இதர உப தொழில்களும்
(4) மக்கள் அனுபவிக்கும் பிரச்சனைகள் (தொழிலாளர் விவசாயிகள், இளைஞர், மாணவர் போன்ற சமூகத்தின் அங்கத்தினர் அனுபவிக்கும் பிரச்சனைகள்)
(5) அரசியல் ஊடுருவல்களும் செயற்பாடுகளும்
(6) எதிர்காலம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனாதிபதி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூர்மையாக்கப் பட்டு வருவதனையே காண்கின்றோம். இதுபோலவே சிங்களம் பேசும் பாமரமக்களும் இடர்பாடுகளுக்குட்படுத் தப்பட்டு வருகின்ற அதே வேளையில், அதனால் எழக் கூடிய எழுச்சிகளை மழுங்கடிப்பதற்காகத் தமிழ்ப் பேசும் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளை மாறி மாறி வரும் முதலாளித்துவ அரசாங்கங்கள் மிக வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன. இத்தகைய நிலையில் ''சுதந்திரம்'' என்பது என்ன? என்று பலரிடையே இயல்பாகவே எழக் கூடிய நியாயமான சந்தேகந்தான். அதற்குப் பதிலளிக்க வேண்டியதும் அவசியம்.

**ஒருவரை ஒருவர் சுரண்டும் நிலை, சாதி, மத, பேதங்களினால் ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படும் நிலை, இன, நிற பேதங்களைக் கூர்மையாக்கிச் சுரண்டும் நிலை ஆதியன சமுதாயத்தில் இருக்கும் வரை அங்கு ''சுதந்திரம்'' என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படியானால் அந்நிய ஆட்சியாளர் ஆட்சிப்** பொறுப்பை எம்மிடமே விட்டு விட்டுச் சென்றார்களே! அது சுதந்திரம் இல்லையா? எனக் கேட்கத் தோன்றும். அந்நிய முதலாளித்துவ ஆட்சியாளர் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டே மற்றைய நாடுகளை அடிமைப்படுத்தி அந்நாடுகளிலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தினரின் உதவியுடன் தமது சுரண்டல் கைங்கரியத்தைச் செய்து வந்தனர். ஆனால் உலகில் ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்கள் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களைப் பின்வாங்க வைத்தது. இதனால் தமது நேரடி சுரண்டலை விடுத்து உள்ளூர் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் மூலம் தமது சுரண்டலை நடாத்த ''சுதந்திரம்'' என்பதை வழங்கி விட்டுச் சென்றனர். இதனாலேயே இன்றும் அதே சுரண்டலமைப்புடைய சமூக அமைப்பு நிலைபெற்று வருகின்றது.

இத்தகைய ''சுதந்திரம்'' பெற்ற விழாவினையே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுபட்ட மூன்றாம் உலக நாடுகள் பிரமாண்டமாகக் கொண்டாடித் தம் வர்க்க நிலைப்பாட்டை மேன்மைப்படுத்தி வருகின்றன. இதில் இலங்கையும் ஒன்று.

இத்தகைய விழாவினையே இலங்கை மிக கோலாகலமாகக் கொண்டாட முனைவதோடு இதே அடிப்படை அம்சத்தைக் கொண்ட இந்திய அரசின் இன்றைய ஜனாதிபதியும் அழைக்கப்பட்டுப் பிரமாதமாக்கப்படுகின்றது.

இலங்கையில் கடந்த ஆகஸ்ட் இனக் கலவரத்தின் போது தமிழ்ப் பேசும் மக்கள் அதிலும் கூடுதலாகத் தோட்டத் தொழிலாளர்கள் கடுமையான பாதிப்புக்கும் அழிவுக்கும் உட்படுத்தப்பட்டமை உலக நாடுகள் மத்தியில் இலங்கைக்கு எதிராகப் பலத்த எதிர்ப்பு எழுந்தது. அண்டை நாடான இந்தியாவில் கூட என்றுமில்லாதவாறான பலத்த எதிர்ப்பு எழுந்தது. இந்திய அரசு கூடத் தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டது. இதனால் அப்போது இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ள இருந்த இந்திய ஜனாதிபதியின் விஜயம் ரத்தானது. **இந்தக் களங்கத்தை மூடி மறைப்பதற்கும்,** உலக நாடுகளில் தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் பிரித்தானிய மகாராணி தம்பதியினருக்குக் கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டுஅநுராதபுரம் வரை கூட்டி வந்து தமது நல்லெண்ணத்தையும், [illegible] காட்டிக்கொண்டது. இதனைத் தொடர்ந்தே இந்திய ஜனாதிபதியின் அழைப்பும் கோலாகல வரவேற்பும் ஒழுங்கும் நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் பிரதான பிரச்சனையாக மலையக தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. அவர்களை இந்நாட்டை விட்டே துரத்தி விட வேண்டும் என கங்கணம் கட்டி நிற்கும் சிங்கள இனவெறி அரசுகள் ஒப்பந்தங்கள் மூலமும், பொருளாதார நெருக்கடிகள், வேலைவாய்ப்பின்மை போன்றவற்றை தோற்றுவிப்பதன் மூலமும், இனக் கலவரங்களை தோற்றுவித்து உடமைகளையும், உயிர்களையும் அழித்து அச்சுறுத்துவதன் மூலமும் காலத்துக்கு காலம் செயலில் இறங்கி வருகின்றன. இந்த நிலையில் முன்பு செய்து கொள்ளப்பட்ட சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்ட நிலையில் அவற்றை மீண்டும் செய்யப்பட்டு தோட்டத் தொழிலாளர்களை இன்னும் பின்னப் படுத்த இன்றைய அரசு முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் தமிழ்ப் பேசும் மக்கள் தமது விடுதலைக்கான போராட்டத்தை நடாத்துவதற்கான சூழ் நிலையை உருவாக்கிக் கொள்ளக் கூடிய சாதக நிலையும் உறுதுணையும் இந்தியாவில் ஏற்பட்டு வருவதனையும் இலங்கை அரசு புரிந்து கொண்டு அதை அறவே துடைத்தொழிக்க வேண்டிய அவசியத்திலும் அயல் நாடான இந்தியாவுடன் பலத்த நட்புறவுக் கரத்தை நீட்டி நிற்கின்றது.

ஆனால், இந்திராகாந்தியின் அரசியல் போக்கு இன்று உலக ஏகாதிபத்திய அடக்குமுறையாளர்களுக்கும் மற்றும் எதேச்சாதிகார ஆட்சியாளர்களுக்கும் எதிரானதாக சமத்துவ சமாதான நட்புறவுகளை விரும்பி அந்த வழியில் நிற்கின்றது. இன்றுள்ள ஜனாதிபதியோ முன்னைய ஜனதா கூட்டுக்குட்டை அரசினால் தெரிவான ஒருவர். இவரது போக்குக்கும் இந்திரா போக்குக்கும் முரண்பாடுகள் இருப்பதில் வியப்பேதுமில்லை. ஆனால் அதன் மூலம் இலங்கை அரசோ அன்றி வேறு நாடுகளோ தமது நலன்களுக்கு சாதகமாக்க முற்பட்டால் அது வெறும் பகற் கனவே.

இந்து சமுத்திர பிராந்திய பாதுகாப்பு நடவடிக்கையில் இலங்கை அரசு நடந்து கொண்ட விதமும், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இலங்கையில் இராணுவ தளவசதி அளிக்கப்பட்டு வரும் விதமும் இலங்கைக்கும் -இந்தியாவிற்கு மிடையிலே யான உறவுகளை மேலும் பலவீனப்படுத்தியது இந்த இரு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளும் உள் நாட்டுக் கொள்கைகளும் முரண்பாடானது. இந்த முரண்பாடுகளை பயன்படுத்தி இந்தியா மற்றும் அதன் நேச நாடுகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்க அமெரிக்க மற்றும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையை நன்கு பயன் படுத்தி வருகின்றன என்பதை இந்திரா உணராமலில்லை.

ஏனவே இந்திய ஜனாதிபதியின் விஜயம் இலங்கை அரசின் அரசியல் சூதாட்டத்தையே வெளிப்படையாகக் காட்டுகின்றது. இத்தகைய தந்திரோபாயங்கள் இந்திரா ஆட்சியில் பலிக்காது என்பதனை மேற்கத்தைய நாடுகள் உணருகின்றன. அதே போல் இலங்கையும் உணரும் என்பதில் ஐயமில்லை.

# நட்சா திட்ட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுக்கும் காணி கொடுத்துள்ளோம் என்பதற்காக ராஜஸ்தலாவ என்றஇடத்தில் மூன்று தமிழ்பேசும் தொழிலா குடும்பத்திற்கு காணிவழங்கியுள்ள அதேவேளையில் 20 சிங்கள குடும்பங்களுக்கு காணி வழங்கப்பட்டுள்ளது. இது போலவே மல்கெல்ல என்ற தோட்டத்தில் 184 தமிழ்க் குடும்பங்கள் பிரஜா வுரிமை பெற்றிருந்தும் 7 குடும்பங்களுக்கு மட்டுமே காணி வழங்கியுள்ளது. இப்படி இந் நட்சா திட்டத்தின்மூலம் சிங்கள குடியேற்றத்தை மலையக தோட்டங்களில் சிங்கள இனவெறி அரசு ஏற்படுத்திவருகிறது.

1978-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத்தில் 26-ம் சரத்தில் முதலாம் பந்தியில், வம்சாவழி பிரஜை பெற்றவர்களும், மூன்றும் பந்தியில் பதிவுப்பிரஜை பெற்றவர்களுக்கும் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்படும் **எல்லா உரிமைகளும் வழங்கப்படும் என** கூறப்பட்டுள்ளது. **மற்றும்** 14-ம் சரத்தின்படி இரண்டாம் பந்தியில், வேறொரு நாட்டின் பிரஜை அல்லாதவர்கள் என்றும், 1978-ம ஆண்டுமுதல் 1988-ம் ஆண்டுவரை இடைப்பட்ட 10 ஆண்டு காலத்தில் அங்குள்ள தமிழ் மக்கள் இலங்கையில் வாக்குரிமையைத்தவிர ஏனைய **எல்லா உரிமைகளையும்** பெற்றவர்களாவர் என்றும் அச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படி அரசியல் சாசனங்களில் தமது நல்லெண்ணங்களாக பதித்துவிட்டு நடைமுறையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு கழுத்தறுக்கும் வேலையில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது. அரசாங்க தோட்டங்களை நட்சாவுக்கு கையளித்த காலத்தில் 80-ம் சுற்றறிக்கையை அத்தோட்டங்களுக்கு தனிச்சிங்களத்தில் இந்த அரசாங்கம்அனுப்பிவைத்தது. தமிழை தேசிய மொழியாக எழுத்தளவில் ஏற்றுக்கொண்ட அரசு சுற்றறிக்கையை தனிச் சிங்களத்தில் இந்தஅரசாங்கம் அனுப்பி சிங்களம்தெரியாத அப்பாவித் தோட்டத் தொழிலாளரை ஏமாற்றி தமது சூழ்ச்சிகளை நிறைவேற்றிக் கொண்டனர். இந்த சூழ்ச்சிகளை நமது தொழிற்சங்கமும் தொழிலாளருக்கு எடுத்துக் கூறவோ அல்லது அரசாங்கத்தை தட்டிக் கேட்கவோ தவறிவிட்டன.

இதன்படி 1981-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் திகதி நட்சா தோட்டங்களிலிருந்த தோட்டத்தொழிலாளர்கள் ஏறக்குறைய 50,000 பேரை உடனே தோட்டத்தைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது. இப்படியான காட்டுமிராண்டித்தனமான ஈனச் செயல்களினால் அல்லற்படும் எமது மக்கள் இன்று ஒருநேர உணவிற்காக மட்டுமல்ல இந்தப் பூமியில் கால்வைத்து நிற்பதற்குக்கூட அருகதையற்றவர்களாக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

நட்சா தோட்டத்தொழிலாளர்கள் அத்தோட்டத்தை விட்டு வேறொரு தோட்டத்தில் பதிவுசெய்ய வேண்டுமானால் அவர்கள் வேலைசெய்த இடத்திலிருந்து அத்தாட்சிப் பத்திரங்கள் எடுத்துவரும்படி கூறுகின்றனர். அவர்கள் வசித்த நட்சா தோட்டத்தில் கடிதம் கேட்டால் முன்பு நீ ஜனவசமவில் தான் இருந்தாய் அங்குபோய் கடிதம் வாங்கிக் கொள் என்கிறார்கள். ஜனவசமவில் போய்க் கேட்டால் உனது அத்தாட்சிப்பத்திரங்களை யெல்லாம் நட்சா பொறுப்பேற்கும்போது அவர்களிடம் ஒப்படைத்து விட்டோம் அங்குபோய் வாங்கிக்கொள் என்று சொல்கிறார்கள். இப்படி அலக்கழிக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கும் நிலையினை பெற்றுள்ளார்கள் தொழிலாளர்கள்.

எனவே காலங்காலமாக வாக்குரிமை, வாழும்உரிமை, பேச்சுரிமை அனைத்தும் பறிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் மூலம் விரட்டப்பட்டு, இனக்கலவரங்களின் மூலம் சிதறடிக்கப்பட்டு இன்னோரன்ன இன்னல்கள் மத்தியில் பல்வேறு திட்டங்களின் மூலம் மேலும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வுக்கு குழிதோண்டும் வேலையில் சிங்கள இனவெறி அரசுகளும் அதன் அடிவருடிகளும் இன்று மும்முரமாகசெயலில் ஈடுபட்டுள்ளன. தோட்டத்தையே தாயகமாகவும், தனது நாடாகவும் எண்ணி வாழ்ந்த எங்களை வர்க்க ரீதியாகவும் இனரீதியாகவும் இனங்கண்டு அறவே அழித்தொழிக்கும் செயலில் சிங்கள முதலாளித்துவ எதேச்சாதிகார கும்பல் ஈடுபட்டுள்ள வேளையில் மலையகமக்கள் தம் எதிர்கால வாழ்வுக்கு உத்தரவாதம் தேடிக்கொள்ள முனைவதில் எந்தக் கொம்பர்களும் தடையாய் இருக்கமுடியாது. அத்தடையை உடைத்தெறிந்து எமது உடமைக்கான போராட்டத்தை நடாத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

# தமிழ் பேசும்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கியம் சமூகப் பிரச்சினைகளான சாதி, சீதனம், தனிமனித உறவு பெண், தாம்பத்திய வாழ்க்கை போன்றவற்றுடன் தொடர்பு கொண்ட அளவிற்கு அரசியலுடன் தொடர்பு பட்டிருக்கவில்லை. 1930ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் பகையும் [illegible]

முரண்பாடுகளும் நிலவி வந்தாலும் கூடப் பாராளுமன்ற அரசியலினால் தீர்க்க முடியுமென்றே இலக்கியங்களில் காணலாம். தத்துவார்த்த ஒருமைப்பாடுகள் அந்த அளவிற்கு நமது இலக்கியங்களில் வளரவில்லை. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி [illegible]

வந்த நூல்களைப் பார்த்தாலும் அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பைப்பற்றித் தெரிந்து கொள்ள முடியும். நெஞ்சைத் தொட்டுக் கேட்டால் பிரச்சினைகளின் சகல அம்சங்களையும் தத்துவார்த்தமாக விளங்கிக் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்படவில்லை என்றே கூறலாம். சிறுபான்மை [illegible] அடக்கி [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நசுக்கப்படும் மக்களின் எழுச்சிக் குமுறல்களே இலக்கிய வடிவம் பெறுகின்றன. அந்த வகையில் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் இன்னமும் நசுக்கி ஒடுக்கப்படவில்லை என்றே கூறலாம். ஒரு சிலருக்குப் [illegible]

கிடைக்காமலிருக்கலாம், இன்னுமொரு சிலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமலிருக்கலாம். ஆயினும் கூட முயன்றால் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை நிலை இருப்பதே எழுச்சி இடம் பெறுமைக்குக் காரணமாக இருக்கின்றது.

www.tamilarangam.net



ஈழச் செய்திகள் EELAM NEWS
தர்க்கீகம் இணைப்பு

# பாதுகாப்புடன் தமிழர் வாழவே அரசுடன் பேச்சு

— அமிர்

தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழவே நாம் அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்றோம். இதில் யாரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் எதிர்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ''தமிழ் ஈழ'' பிரகடனம் விண்ணை நோக்கி செல்லும் செய்மதி போல் திகழ வேண்டும். ஆனால் வைகுந்தவாசனால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி புஸ்வாணமாகிவிட்டது, ''தமிழ் ஈழ'' பிரகடனத்தை 6 ஆயிரம் மைல்களுக்கப்பால் செய்து விடுவதால் ஏதும் நடந்து விடப் போவதில்லை. அப்பிரகடனம் இங்கேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களால் இங்குள்ள மக்கள் பொங்கல் நன்னாளை நிம்மதியாக கொண்டாட முடியாத ஒரு பதட்ட நிலையை அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் ஏற்படுத்தியது. அவர்களால் முடியுமானால் இங்கே வந்து பிரகடனம் செய்து அதற்காக போராடட்டும். பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்து கொண்டு பூச்சாண்டி காட்டுவதன் மூலமா ''தமிழ் ஈழம்'' கிடைத்து விடப் போகிறது? என்றார்.

மேலும் தெரிவிக்கையில், பிரகடனம் செய்ய முன்வந்தோர் அதற்கான ஏதும் நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்களா? வெறும் அறிவித்தலுடன் மட்டும் நின்று விடலாமா? இவையெல்லாம் வெறும் விளம்பரத்துக்காகவன்றி வேறு ஏதும் நடந்து விடப் போவதில்லை. வைகுந்தவாசன் சிந்திப்பதற்கு முன்பே நாம் ''தமிழ் ஈழம்' பற்றி முடிவு எடுத்துவிட்டோம். தந்தை செல்வாவை எதிர்த்து போட்டியிட்டவர், கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து கொண்டு நாம் நடாத்திய போராட்டங்களை முறியடிப்பதற்கு முனைந்தவர், தற்போது ''தமிழீழப்'' போராளியென்று நாமம் சூட்டிக் கொண்டு விளம்பரம் தேடி வருகின்றார். அவரது வீணான இம்முயற்சிகள் தமிழினத்தை அழிவுக்கே கொண்டு செல்லும் என்றும், நாம் முன் வைத்த 5 அம்சக் கோரிக்கைகளை அரசாங்கம் தீர்த்து வைப்பதாக உறுதியளித்ததை யடுத்தே நாடாளுமன்றத்தை பகிஸ்கரிப்பது கைவிடப்பட்டது. எமது கோரிக்கை முழுவதும் செயற்படுத்தப் படாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக செய்ற்படுத்தப்பட்டு வருகின்றது.' என்று தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்கள் வாழ வசதி செய்வேன்

— ஜனாதிபதி உறுதி

கடந்த இனக்கலவரத்தின் போது யாழ்பாணத்திலிருந்து தெற்கே திரும்பிய சிங்கள மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்படுவர்.

இப்படி தம்மைச் சந்தித்த பௌத்த தூதுக்குழுவிடம் ஜனாதிபதி உறுதியளித்தார்.

சிங்கள மக்களைப் பாதிக்கும் பல விஷயங்கள் சம்பந்தமாக இத் தூதுக்குழு ஜனாதிபதியுடன் கலந்துரையாடியது. இக் கலந்துரையாடலில் கல்வி, இளைஞர்விவகார, வேலைவாய்ப்பு அமைச்சர் ரனில் விக்கிரமசிங்கா உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கல்பகே, ஐ. தே. க. பொதுச் செயலாளர் ஹார்ஸா அபேவர்த்தன ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

இக் கலந்துரையாடலின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில், கடந்த இனக் கலவரத்தின்போது வடக்கில் இருந்த சிங்களமக்கள் தம் காணிகளையும், சொத்துக்களையும் இழந்துவிட்டு தெற்கே திரும்பிவிட்டனர். அவர்களை மீண்டும் அவர்கள் வசித்த இடங்களில் குடியமர்த்துவதற்கு ஜனாதிபதி உறுதியளித்தார். அங்கு அவர்களுக்குப் போதிய பாதுகாப்பை அரசு வழங்கும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார். சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் சம்பந்தமாக இரு அரசாங்கங்களும் பரிசீலனை செய்யும் எனவும் ஜனாதிபதி கூறினார். மக்கள் தொகைக்கு ஏற்பவிகிதாசார அடிப்படையில் குடியேற்றத் திட்டங்களை மேற்கொள்வது நடைமுறையில் உள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள் சக்தியை திரட்டி அரசை விரட்டுவோம்

— கொல்வின்

அரசாங்கம் இந்த ஆண்டை தேர்தல் ஆண்டாக கொண்டுள்ளது. நாமும் இந்த ஆண்டை தேர்தல் ஆண்டாகக் கொண்டு ஐ. தே. க. அரசை விரட்டுவோம். இவ்வாறு லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மூன்று கட்சிகளின் இணைப்புக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ல. ச. ச. கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ. ல. சு. கட்சி, (மைத்திரி பிரிவு) ஆகிய மூன்று கட்சிகளே இந்த எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

தொடர்ந்து கொல்வின் பேசுகையில், 1977 இல் மக்களுக்குக் கொடுத்த வாக்குகளில் ஒன்றையேனும் இந்த அரசு நிறைவேற்றவில்லை. இதை மக்கள் நன்கு இனங்கண்டு கொண்டுள்ளனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஐ. தே. க. அரசாங்கம் 1983ம் ஆண்டுத் தேர்தலிலும் வெற்றிவாகை சூடி ஆட்சியில் நீடித்திருக்கலாம் என நம்பிக் கொண்டிருக்கின்றது அதற்காக தேர்தல் கூட்ட விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டு தங்கள் பாதுகாப்புக்காக ஒரு அரணையும் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இன்று ஐ. தே. கட்சியில் 1984-ல் ஜனாதிபதியாக யார் வருவார் என்பது தான் அடிபிடியாக உள்ளது. ஜே. ஆருக்குப் பின்னர் ஆர். பிரேமதாசாவே ஜனாதிபதியாக வருவார். அவர் அமெரிக்காவில் இரத்த நாளத்தை சுகப்படுத்திக் கொண்டாலும் கூட ஜனாதிபதி பதவி கிடைக்காமல் போய்விடுமோ என அவர் அச்சக்கனவு கண்டு கொண்டிருக்கின்றார். என்று பேசினார்.

இக்கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் கே. பி. சில்வா தமதுரையில்:- அமெரிக்காவுக்கு திருகோணமலையை ஈடுவைப்பதன் மூலம் இலங்கையர்களைக் கொல்ல அரசு முற்படுகிறது. மகாவலித் திட்டத்தில் பயன் தரும் இடங்களை மக்களுக்குக் கொடுக்காமல் 35 வீதத்தை வெளிநாட்டவர்களுக்குக் கொடுக்க இருக்கின்றது. இதன் மூலம் வெளி நாட்டவர்களின் ஆதிக்கத்திற்கு இடம் அளிக்கிறது. என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீ. ல. சு. கட்சி (மைத்திரி) சார்பில் எஸ். கே. சூரியாராச்சி பேசுகையில், இந்த அரசாங்கத்திற்கு எதிராக நாம் ஒன்றுபட்டு போரிட தயாராக இருக்கின்றோம். என்று கூறினார்.

இக்கூட்டத்தில் பெர்னாட் சொய்ஸா, டாக்டர் ஒஸ்மன் ஜயவர்த்தன ஆகியோரும் பேசினர்.

## அரசுடன் பேச்சுவார்த்தை வேண்டாம்

— கூட்டணி எம்பிக்கள்

அரசாங்கம் நிறைவேற்றித் தருவதாக ஒப்புக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கைகள் இன்னமும் அமுல் நடத்தப்படவில்லையாதலால் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதில் அர்த்தமில்லையென 5-8-82 அன்று கொழும்பில் கூடிய கூட்டணி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் எம். பிக்கள் சிலர் காரசாரமாக வலியுறுத்தினர்.

அரசு—கூட்டணி உயர்மட்டக்குழுவின் அடுத்த கூட்டம் 19ஆம் திகதி நடைபெற இருப்பதால் அதன்பின் பேச்சுவார்த்தையை தொடருவதா? இல்லையா? என முடிவு எடுக்கப்படலாம் என கூட்டணி வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டன.

அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளில் அரசு எதுவித கவனமும் செலுத்தாமல் இருப்பதை எம். பிக்கள் சுட்டிக்காட்டினர். வவுனியா புத்தர்சிலை விவகாரம், காணிவழங்கும் அதிகாரம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு இருக்கிறது எனக் கூறப்பட்டிருப்பினும், அந்த அதிகாரங்களை பிரயோகிக்கக்கூடியதான ஏற்பாடுகளை அரசாங்கம் இதுவரை செய்யவில்லை என்பனவற்றையும் எம். பிக்கள் சுட்டிக்காட்டி காரசாரமாகப் பேசப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

கல்வி வெள்ளை அறிக்கையை எதிர்ப்பது என்றும் அக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. அநேகமாக கூட்டணி எம். பிக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், அப்போது கொழும்பில் தங்கியிருந்த கிளிநொச்சி எம். பி. ஆனந்தசங்கரி இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவர் தொடர்ந்து சில குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மதச்சிலை வைக்க முயற்சி!

பொத்துவில் தொகுதியில் திருக்கோயில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காஞ்சிராக்குடா மலைக்குன்றில் உள்ள முருகன் ஆலயத்திலிருந்து முருகன் சிலையை அகற்றிவிட்டு புத்தர் சிலை ஒன்றை வைக்க முயற்சி செய்யப்பட்டது.

ஜீப்பில் வந்த கோஷ்டி ஒன்று பிரஸ்தாப ஆலயத்துக்கு வந்து அப்பகுதி மக்களை பயமுறுத்தி அவர்களைக்கொண்டே கோவில் கூரையை அகற்றச் செய்தனராம். அங்கு புத்தர் சிலையொன்று வைக்கப்படவுள்ளதாகவும் இனிமேல் இந்தக் கோவில் பக்கம் ஏவரும் தலைகாட்டவேகூடாது எனவும் அக்கோஷ்டியினரால் அங்குள்ள மக்கள் பயமுறுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் பட்டாசுக்கு தடை

தைப்பொங்கல் தினத்தை யொட்டி பட்டாசுகள் விற்பனை செய்வதையும், வெடிப்பதையும் அரசாங்கம் தடைசெய்துள்ளதாக அறிவித்துள்ளது. ''தமிழீழப் பிரகடனம்'' தொடர்பாக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளில் மேற்படி நடவடிக்கையை அமுல் செய்துள்ளது.

எனினும் விற்பனையாளர்கள் மறைவாக விற்பனை செய்தனர் என்பதும், வழமை போல் பொங்கல் தினத்திற்கு முன்பும் அன்றும் பின்பும் பட்டாசுகள் வெடித்தவண்ணமேயிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொங்கல் தினத்தை யொட்டி இராணுவம் தயார் நிலையில்

பொங்கல் தினத்தன்று உத்தேச ''தமிழ் ஈழ'' பிரகடனத்தின் போது வடபகுதியில் நடைபெறக்கூடிய எத்தகைய அசம்பாவிதங்களையும் முறியடிக்கும்வகையில் விசேட இராணுவப்படைப்பிரிவு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இராணுவ படைப்பிரிவைச் சேர்ந்த மூன்று அணிகள் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இராணுவ சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். வடபகுதியில்நிலைகொண்டுள்ள இராணுவத்தினரைக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுமாறு இராணுவ தலைமைப் பீடம் பணித்துள்ளது.

லண்டனில் நடைபெறவிருக்கும் ''தமிழ் ஈழ'' பிரகடனத்தின்போது, வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அசம்பாவிதம் எதுவும் நடைபெறுவண்ணம் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாம். இதற்கிடையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அச்சகங்கள் மீது இரகசியப் போலிசாரின் கவனம் திரும்பியிருக்கிறது

வடபகுதியின் கடலோரப் பகுதிகள் இம்மாதம் 10ஆம் திகதி முதல் தீவிர கண்காணிப்புக்குட்படுத்தப்படும் என தெரியவருகின்றது. இதேவேளை யாழ். குடாநாடு எங்கு நோக்கினும் இராணுவமயமாகவே உள்ளது. இதனால் பொது மக்களின் நடமாட்டம் இரவில் குறைவடையத்தொடங்கியுள்ளது.

## சிங்களக் குடியேற்றம்

அக்கரைப்பற்று அம்பாறை வீதியில் ஆரும் கட்டை என்னுமிடத்தில் உள்ள காணிகளில் சிங்கள குடியேற்றங்கள் நடைபெற்றுவருவதாக அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. ஆ. வேல்முருகு தமது கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கத்திற்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி உடன் ஜனதிபதியின் கவனத்திற்குக்கொண்டு வந்து ஆவன செய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்

இப்போது இக்காணிகளில் 58 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வெளிமாகாணத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக அப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக்கையின் மூலம் சிங்களக் குடியேற்றத்தை விஸ்தரிக்கவும் தமிழ் பேசும் மக்களை விரட்டியடிக்கவும் திட்டமிடப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

## தீகவாபி இஸ்லாமியர் மல்லிகைத்தீவில்

தீகவாபி புனித நகர்த் திட்ட நடவடிக்கையின் முதல் கட்டமாகப்புராதன குளத்தை புனரமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து அப்பகுதிகளில் இஸ்லாமிய மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டன, இதனால் இப் பகுதியில் வாழ்ந்த மக்களின் காணிகளுக்குப் பதிலாக அம்பாறை மாவட்ட மல்லிகைத் தீவில் சீனிக் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான பகுதியில் மாற்றுக்காணிகள் வழங்கப்படும்.

ஜனதிபதியின் பணிப்பின் பேரில் தீகவாபி இஸ்லாமியர்கள் பிரச்சனையைத் தீர்த்து வைக்க விஜயம்செய்த அமைச்சர்கள் இருவரும் வெள்ளிக் கிழமை தீகவாபி பௌத்த விகாரையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். அதன் பின் ஹிங்குரானை சீனிக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் நடத்திய கூட்டத்தில் அமைச்சர்கள் இருவர் மற்றும் பலர் கூடி எடுத்த தீர்மானத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும்படி அமைச்சர்கள் திரு. ஈ. எல். சேனநாயக்க, அல்ஹாஜ் எம். எச். முகம்மது இருவரும் அமைச்சரவைக்கு சிபார்சு செய்தார்கள். இதுபற்றி அமைச்சர் முகம்மது தெரிவிக்கையில், பூதாகரமாக உருவெடுத்த தீகவாபி பிரச்சனையைச்சுமுகமாக தீர்க்கமுடிந்தது என மகிழ்ச்சி தெரிவித்தார்.

## கொலை கொள்ளை

★ மட்டக்களப்பு சினிமா தியேட்டர் முகாமையாளர், வங்கியில் பணத்தை வைப்புச் செய்வதற்காக சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு அவர்வசமிருந்த 18 ஆயிரத்து 500 ரூபா பணம் வழிப்பறி செய்யப்பட்டது. மேற்படி முகாமையாளரான எஸ். அமிர்தலிங்கம் காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

★ பேசாலையிலிருந்து தலைமன்னார் பழைய பாலத்தடிக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர் படகுகளில் வெளியூர் கொள்ளைக் கோஷ்டி ஒன்று மீன்களையும் டீசல் எண்ணைகளையும் கொள்ளையடித்துவிட்டு மீனவர்களைத் தாக்கியும் விட்டுச் சென்றுள்ளனர்.

★ கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தபுரம் என்னுமிடத்தில் வசிக்கும் கே. சுப்பிரமணியம் என்பவர் வீட்டில் 26,000 ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. வீட்டைச் சோதனையிட வந்துள்ளோம் எனக் கூறி கதவைத்தட்டிய ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் அதிகாலை ஒருமணியளவில் இக் கொள்ளையை நடாத்தியுள்ளனர்.

★ யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வசிக்கும் திருமதி குமாரசாமியின் வீட்டில் சுமார் 1 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டன. இரவு 10 மணியளவில் ஆயுதங்களுடன் புகுந்த நான்கு வாலிபர்கள் வீட்டில் இருந்தவர்களை மிரட்டிவிட்டு அங்கிருந்த நகைகளைக்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். நகை அடகு கடையான அங்கு அடகுவைக்கப்பட்ட நகைகள் எதுவும் கொள்ளையிடப்படவில்லை. அயல் வீட்டார் எழுப்பிய கூக்குரலே இதற்குக் காரணமாம்.

★ உடுப்பிட்டிப் பகுதியான நெல்லியடி கிழக்கில் உள்ள வீடொன்றில் 3 லட்சத்து 71 ஆயிரத்து 75 ரூபா பெறுமதியான தங்க நகைகளும் பணமும் துப்பாக்கிமுனையில் ஐந்துபேர் கொண்ட இளைஞர் கோஷ்டி யொன்றினல் கொள்ளையிடப்பட்டது. எஸ். குலேந்திரராஜா என்பவரின் வீட்டினுள் புகுந்த கோஷ்டியினர் வீட்டிலுள்ளவர்களை ஒரு அறையில் பூட்டிவிட்டு கொள்ளையை நடத்தியுள்ளனர்.

★ வசாவிளான் மகாவித்தியாலயத்திலிருந்த ரோனியோ இயந்திரம் துப்பாக்கி ஏந்திய இளைஞர்களினல் கொள்ளையிடப்பட்டுள்ளது.

★ மூதூர்ப் பகுதி சிகரட் ஏஜெண்டின் விற்பனை வாகனம் சேதுநுவர நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் துப்பாக்கி ஏந்திய இருவர் வாகனத்தை மறித்து அவர்களிடமிருந்த 19 ஆயிரம் ரூபாவையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

★ கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு சொந்தமான பெற்றோல் நிலையத்தில் துப்பாக்கி காட்டி விற்பனைப்பணம் 2,779ரூபா 54சதம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. கொள்ளையின் பின் பெற்றோல்நிலையத்திற்கு அருகில் 12ஆம் நம்பர் தோட்டா ஒன்று பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது.

## கல்வி வெள்ளை அறிக்கை எதிர்ப்பு: பொலிஸ் தடியடி

கல்வி வெள்ளை அறிக்கையை எதிர்த்து கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டங்கள் நடாத்தி ஊர்வலமாக கொழும்பு நகர மண்டபத்தை நோக்கி வந்த போது பொலிசார் ஊர்வலத்தைத் தடைசெய்து தடியடிப் பிரயோகம் செய்தனர்.

கல்வி வெள்ளையறிக்கையை எதிர்த்து மீண்டும் இம்மாதம் 22-ம் திகதி காலிமுகத் திடலின் முன் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது பாராளுமன்றத்தினுள்ளே இவ்வறிக்கை சம்பந்தமான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பொலிசார் மாணவர்களை தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பல பாடசாலை மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு பல்கலைக் கல்லூரியிலும், யாழ் பல்கலைக் கழகத்திலும் கல்வி வெள்ளை அறிக்கையை எதிர்த்துப் பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டமும் இடம் பெற்றன.

## அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் சமாதான நீதவான்கள்!

அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் யாவரையும் சமாதான நீதவான்களாக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் கோரிக்கையைக் கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபை கடந்த ஆண்டு அரசாங்கத்திடம் கையளித்தது, மேற்படி தீர்மானத்தை பரிசீலனை செய்த நீதி அமைச்சு அதனை இப்போது அங்கீகரித்திருக்கின்றது.

நீதி அமைச்சு இந்தத் தீர்மானத்தை அங்கீகரித்திருப்பதாக உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாண துறை அமைச்சுக்குத் தெரிவித்துள்ளதாகக் கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் அல்மன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## வேலைநிறுத்தங்கள்

**யாழ் ப. நோ. கூ. ச. ஊழியர்**

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில்குதித்தனர். சங்க ஊழியர் ஒருவரின் வேலை நீக்கம் தொடர்பாகத் தாம் வேலைநிறுத்தம் செய்வதாக மேற்படி வேலைநிறுத்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

**புசல்லாவ தோட்டத் தொழிலாளர்**

★ புசல்லாவ பிராந்தியத்தைச்சேர்ந்த 15,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். கலுகல்வதோட்டத் தொழிற்சாலையைமூடியதை எதிர்த்தும், அத் தோட்டத் தொழிலாளர்கள் நடாத்தும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆதரித்தும், வெடிமுல்ல தோட்டத்தை தனியாரிடம் ஒப்படைப்பதை எதிர்த்தும் இந்த வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது.

## நெவில் புதிய கட்சித் தலைவர்

★ பாணந்துறை எம். பி. பதவியில் இருந்து இராஜினமாச்செய்த டாக்டர் நெவில் பெர்னண்டோ லங்கா ஜாதிக பெரமுன என்ற புதிய கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இவரது இடத்திற்கு புதிய பாணந்துறை எம்பியாக திரு. பீ. பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

## வடக்கில் துண்டுப் பிரசுரங்கள்

வடபகுதியில் நடைபெற்று வந்த வன்செயல்கள் தொடர்பான, தகவல் கூடிய துண்டுப் பிரசுரங்கள் ரோனியோ இயந்திரத்தினல் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. அச்சகத்தில் கொலையுண்ட சிவசண்முகமூர்த்தி பற்றியும் ஆனைக்கோட்டை பொலிஸ்நிலையக் கொள்ளை, குரும்பசிட்டி நகைக் கொள்ளை, கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளைபற்றியும் அப்பிரசுரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இப்பிரசுரங்கள் உமாமகேஸ்வரன் என்பவரால் வெளியிடப்பட்டிருந்தது. பிரபாகரன் என்பவர் பற்றியும் அப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. அரசியல்தலைவர்களை பயமுறுத்தும் விதத்திலும் அவை அமைந்திருந்தன எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

★ கோட்டை ஜெயவர்த்தனபுரத்தில் அமைக்கப்பட்டு வந்த புதிய பாராளுமன்றக் கட்டட வேலைகள் முடிவடைந்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கு எப்போது சபை கூடும் என்பது தீர்மானிக்கப்படவில்லையாம்.


★ இலங்கையின் தேசியதின விழாவில் கலந்துகொள்ள பெப்ரவரி 2ஆந் திகதி கட்டுநாயக்காவில் வந்திறங்கும் இந்திய ஜனதிபதி நீலம் சஞ்சீவரெட்டிக்கு செங்கம்பள வரவேற்பு அளிப்பதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## இராணுவப் பாதுகாப்பில்...

பயங்கரவாத குற்றச்செயல்களுக்காக கைதாகி நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்படுவோர் இதன்பின் இராணுவ பாதுகாப்பிலேயே வைக்கப்படுவார்கள். சிறைச்சாலைக்கு மாற்றப்படமாட்டார்கள். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் இதற்கேற்ற வகையில் விரைவில் திருத்தம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. நீதியமைச்சின் சிபார்சின் பேரிலேயே அரசாங்கம் இம் முடிவை எடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உழவர் நாள் சிறப்பு மலர்

# பாரதி பாடிய உழவு

**உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம் !......**

எனப் பாடிய பாரதியாரின் நூற்றுண்டு விழா, தமிழகம், புதுச்சேரி அரசுகளினுல் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இம்மாகவிக்கு இங்கும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இவ்விழா இவன்தன் நூற்றுண்டின் முதல் மாதமான கடந்த மார்கழியில் முன்னணி நாடுகளில் மிகப் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனுல் இந்தப் பாரதியின் பாடலை நூற்றுண்டுக்காலத்தில் முதலாவதாகவரும் தமிழர் விழாவான 'உழவர் விழா'வில் அவன் தன் பணியை நினைவுகூரும் பொருட்டு, பாரதியின் பாடலை உழவுடன் இணைத்து உழவர் நலனில் அவன் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தான் எனப் பார்த்து அவன் கூறிய வழிநடப்பது தமிழ் பேசும் உழவர்களின் தலையாய கடமையாகும்.

தென்இந்தியாவின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள எட்டையபுரமெனும் கிராமத்தில்தான் 'சுப்பையா' என்று பல சுதந்திரப் போராட்ட வீரர்களினுல் செல்லமாக அழைக்கப்பட்ட 'சுப்பிரமணியன் 1882ஆம்ஆண்டு மார்கழிமாதம் 11-ம் திகதி அவதரித்தான். இவன் தனது கிராமத்தைப் பார்த்து,

**இனிய பொழில்கள் 'நெடிய வயல்கள்'**
**எண்ணரும் 'பெரு நாடு'!**
**கனியும் கிழங்கும் 'தானியங்களும்**
**கணக்கின்றித் தரும் நாடு'**

என, வேளாண்மையை பிரதான தொழிலாகக் கொண்ட எங்கள் கிராமம் ஒரு பெரிய நாடு என்று பாடும்போது, நெடிய வயல்களை இவ்வுலகின் மிகப் பெரிய சாதனமாகவும் தானியங்களை இவ்வுலகின் மிக மிக முக்கிய பொருளாகவும் கூறுகின்றுர்.

சுப்பிரமணியனுக்கு, எட்டையபுரத்து குறுநில சமஸ்தானத்துப் பிரபு முன்னிலையில் சமஸ்தான கவிஞர்களால் 1893ஆம் ஆண்டு பாரதி—கலைமகன் இலக்கியத்தின் உச்சாணிப் பெயர் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டது. சுப்பிரமணிய பாரதிக்கு முன்னர், வேலாயுத பாரதி, ஈசுவர பாரதி. இராம பாரதி, குமார பாரதி, கோவிந்த பாரதி, துஞ்சுர பாரதி, மதுரகவி பாரதி, சோம சுந்தர பாரதி எனப் பல பாரதிகள் தமிழகத்தில் தோன்றி மறைந்திருக்கின்றனர். இந்தக் கிடைத்தற்கரிய பட்டத்தைத் தனது படைப்புகளில் நிலைநாட்டி வந்த பாரதி தனது படைப்புகளின் பிற்பட்ட பகுதியில் பல புரட்சிகரமான பாடல்களை எழுதி மக்களைத் தொழிலாளர் விடுதலைக்கு உந்தித் தள்ளினுன்; என்றுல் அது மிகையாகா.

பல பள்ளுப் பாடல்களைப் பாடிய பாரதிகளில் வேறுபட்டு நின்று 'சுந்தரப்பள்ளு'ப்பாடினுன் சுப்பிரமணிய பாரதி. அப்பாடலின் நாலாவது அடியில்,

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை**
**செய்வோம்—வீணில்**
**உண்டு களித்திருப்போரை**
**நிந்தனை செய்வோம்**
**விழலுக்கு நீர் பாச்சி மாயமாட்டோம்**
**— வெறும்**
**வீணர்க்கு உழைத்து உடல்**
**மடிய மாட்டோம்.**

என்று 'பாடி, 'இந்த' மனிதகுலம் வந்தனைசெய்ய வேண்டியது உழவுக்குத்தான் என்றும், நெற்றி வியர்வைத் துளிகளை நெல் மணிகளாக்கித் தரும் உழவனை மதியாமல், அவன் தன் பசியாற்றுமல், அத்தியாவசிய உணவுப் பொருளான தானிய வகைகளைப் பறித்தெடுத்துச் சென்று கொள்ளை இலாபம் தேடிக்கொண்டிருக்கும் வீணர்களுக்கு உழைத்துக் கொடுத்து, எங்கள் உடலையும், உயிரையும் மாய்க்கமாட்டோம் என்று இந்த ஜெகத்தின் உழவர்கள் சார்பாகப் பாரதி பாடினுன்; அறுவடைக்குக் 'கதிர் அரிவாள்' கொண்டு செல்லும் உழவனுகி நின்று வீராவேசமாக இடிமுழக்கஞ் செய்தான் அவன்.

இவன் அத்துடன் நிற்கவில்லை. 'அப்பள்ளுவின்' ஐந்தாவது அடியிலும் கூட,

**'நாம் இருக்கும் நாடு நமது**
**என்பதறிந்தோம் — இது**
**நமக்கே உரிமையாம் என்பதறிந்**
**தோம்—இந்தப்**
**பூமியில் எவர்க்கும் இனி அடிமை**
**செய்யோம்**

என்று, உழவுத் தொழிலையே பெருந் தொழிலாகக் கொண்டிருந்த அன்றைய பாரதத்தில், உன்னுவே, பாட்டனு போன்ற வடநாட்டுக் கிராமங்களில் உழவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் கிளர்ச்சி நடத்திக்கொண்டிருந்தபோது, நமது தென்னுட்டுப் பாரதியும் தனது பாடலால் ஒரு 'புரட்சிகர உழவனுக' மாறி நின்று போர்க்குரல் கொடுத்தான்.

அன்று பாரதத்தில் பெரும்பான்மை மக்கள் உழவர்களாகவே இருந்ததை இக்கட்டுரையின் முன்பகுதியில் அறிந்துள்ளோம். ஆதலால் பாரதி இன்னும் ஒருபடி முன்னேறித் தனது படைப்பான 'பாரத மக்களின் தற்கால நிலைமை' பற்றி விளக்குகையில்,

**' கஞ்சி குடிப்பதற்கிலார் — அதன்**
**காரணம் இவையெனும்அறிவுமிலார்'**

என்று தனது பாடலினுல் அடுத்தடுத்து உழவனுக மாறி நின்று படிப்பறிவற்ற பாமர உழவனே! இதே நாட்டினுல் நாங்கள் மனிதவதை செய்யப் பட்டும்கூட நெல்லு வகைகளை மூடைகளாக்கிக் களஞ்சியங்களில் குவிக்கின்றோம். அவை ஏன் நமக்குக் கிடைக்கவில்லை. நமது பிள்ளைகள் ஏன் பட்டினியால் துடிதுடித்துக் கதறுகின்றுர்கள். இதை அறிய முடியாதவாறு இருக்கின்றீர்களே என்று கூறிப் பின்னும் தனது படைப்பின் இன்னொரு பகுதியில்,

**'பஞ்சமோ பஞ்சம் என்றே நிதம்**
**பரதவித்தே உயிர் துடிதுடித்தே**
**துஞ்சி மடிகின்றுரே—இவர்**
**துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே'**

என்று தானே துடிதுடித்துக் கதறிக் கண்ணீர் வடிக்கின்றுன்.

இவ்வியல்புடைய பாரதி ஐரோப்பாக் கண்டத்தில் அமைந்துள்ள சோவியத் யூனியனில் 1971இல் நடந்த மாபெரும் புரட்சியை அறிந்து

**இமயமலை வீழ்ந்ததுபோல வீழ்ந்து**
**விட்டான்**



(பாரதியும் துணைவியாரும்)

**யாரரசன், ... ...**
**இடிபட்ட சுவர் போலக் 'கலிவீழ்ந்தான்'**
**'கிருத யுகம் எழுக மாதோ'!**

என்று ஆனந்தத்தில் துள்ளிக் குதித்து ஆடிப், பாடி, அதைத் தமது ஏழை உழவர்களுக்கும் பங்கிட்டு, அவ்வாட்சியில் சோவியத் ரஷ்ய உழவர்களின் எதிர்காலம் எப்படி இன்று அமைந்துள்ளதோ, இப்படித்தான் இருக்கப்போகின்றது என்று இற்றைக்கு அறுபத்தைந்து ஆண்டுகட்கு முன்பே தனது பாடலில் இன்னொரு பகுதியில்,

**'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு**
**மேன்மையுறக் குடிமை நீதி**
**கடியொன்றில் எழுந்தது பார்**
**குடியரசொன்று**
**உலகறியக் கூறிவிட்டார்;**
**'அடிமைக்குத் தளையில்லை;**
**யாருமிப்போது**
**அடிமை இல்லை; அறிக என்றுர்.**

என்றவன் பாடுகின்றபோதே ரஷ்ய உழவருக்கு மட்டுமல்ல, இந்த உலகின் எந்தமூலையில் உழுது கொண்டிருக்கும் உழவனுக்கும் ஜெகப் புரட்சித் தலைவன் லெனின் நடாத்தியதைப் போன்றதையொத்த, புரட்சி நடாத்தப்பட்டு அப்புரட்சியாளர்களில் அமைக்கப்படும் ஆட்சியினுல் மட்டும் தான் இவர்தம் இடர்தீர்ந்து இனிமை வாழ்வு பெறமுடியுமென்று தனது எழுத்தில் கொஞ்சங்

(மறுபக்கம் பார்க்க)

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உழவர் இழிநிலை நீங்க....?

ஒரு சமூகத்தில் உழவுத் தொழில் வகித்துவரும் பங்கைப்பற்றிப் பிரத்தியேகமாக எடுத்தியம்ப வேண்டியதில்லை; அவ்வளவு முக்கியத்துவமுடைய இத்தொழிலுக்குக் கிடைத்திருக்கும் சமூக அந்தஸ்தும், இத்தொழில் புரிவோருடன் கூடவே குடியிருக்கும் 'பசியும் பஞ்சமும்' எவருக்கும் வெட்ட வெளிச்சமான விடயங்கள். உழவுத் தொழிலே அச்சாணி என்றும் உழவே உயிர்நாடி என்றும் வெற்றுக் கூச்சல்போடும் கும்பல் இதே உழவர் கருகிச் சாவதைப் பெரிதுபடுத்தப் போவதில்லை. பதிலாக உழவரின் இந்த இழிநிலையைப் பேணும் சமூக அமைப்பை மாற்றியமைக்க முயலுவோரை அழித்தொழிக்க 'உளவு' வேலை செய்பவர்களாகவே இருப்பர். இத்தகையவர்களின் பிடியில் வாழும் ஏழை எளியவர்கள் தமது நிலையைச் சல்லடை போட்டுத் துளைத்து, கர்த்தாக்களை அறிவதன்மூலம் — அரசியல் விழிப்புணர்வைப் பெறுவதன்மூலம் — விடிவை நோக்கிக் காலடி எடுத்து வைக்கவேண்டிய காலகட்டமே இது. இன்று உழவரின் விழிப்புணர்வுகள் வெளிப்படாமலிருக்கப் பலவகை முலாங்கள் பூசப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றே சமய முலாம். இதன் பிரதிபலிப்பே உழவர் விழா சமயவிழாவாக உருமாறியிருப்பதாகும்.

## சமூக அமைப்புகளில் பரிணாமம் :

ஆரம்பத்தில் நிலவிய புராதன பொதுவுடைமைச் சமூக அமைப்பு ஆண்டான், அடிமை, நிலப்பிரபு, பண்ணை அடிமை, முதலாளி—தொழிலாளி, சோஷலிசம் ஆகிய கட்டங்களூடாகக் கம்யூனிச அமைப்பை அடையும். இத்தகைய சமுதாய வளர்ச்சிக் கட்டங்களுள் ஆண்டான்—அடிமை, நிலப்பிரபு—பண்ணை அடிமை, முதலாளி தொழிலாளி ஆகியவற்றில் ஒருசிலரின் ஆதிக்கத்திற்குப் பெரும்பான்மையான மக்கள் அடிபட்டு வாடி வருகின்றனர். ஆனால் இக்கட்டங்களில் அடக்குவோருக்கும் அடக்கப்படுவோருக்குமிடையிலான உறவில் பல்வேறு மாற்றங்கள் இருந்தன.

ஆண்டான் — அடிமை முறையில் அடிமை. ஆண்டானின் ஒரு சொத்துப்போல் இருந்தான். தன்னிச்சைப்படி ஒரு அடிமையை ஆண்டானால் வாங்கவும் விற்கவும் முடியும். 'அடிமை ஒரு பேசும் கருவி' என ஆய்வாளர்களால் வர்ணிக்கப்பட்டது. இங்கு ஒரு அடிமையின் உடலுழைப்பு ஆண்டானிற்கு முழுமையாகச் சேர்ந்தது.

நிலப்பிரபுத்துவ முறையில் பண்ணை அடிமைகள் நிலப் பிரபுக்களுக்கு உரித்துடைய பரந்த நிலப்பரப்பில் உழுதும், விதைத்தும், களைபிடுங்கியும், நீர்பாய்ச்சியும். கதிரறுத்தும், சூடடித்தும் மாடாக உழைத்து இவ்விளைச்சலை நிலப்பிரபுவின் வீட்டில் குவித்து வந்தனர். இதில் ஒருசிறு பகுதி பண்ணையடிமைகளுக்குக் கூலியாகச்சேரும். சில இடங்களில் பண்ணை அடிமைகளுக்கென்றே பிரத்தியேகமாகச் சிறிதளவு நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டிருக்கும். இங்கு பிரபுவின் பெருமளவு நிலத்தில் வேலைசெய்தபின் எஞ்சிய ஒய்வு நேரத்திலேயே தமக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் உழைக்க வேண்டும். இவ்வமைப்பில் பண்ணை அடிமையின் உழைப்பின் பெரும்பகுதி பிரபுவிடம் ஒதுங்கிவிடச் சிறுபகுதிக்குக் கூலி வழங்கப்படுகிறது. இதனால் நிலப்பிரபுத்துவ அமைப்பில் உள்ள பண்ணை அடிமைகள் ஆண்டானின் அடிமைகளிலும் ஒருபடி தனது தளைகளை அறுத்தவரெனலாம்.

இவற்றிற்கடுத்தாற்போல் உருவாகும் முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி மறைமுகமாகக் கொள்ளையடிக்கப்படுகிறது. இதனைத் தனது ஆழ்ந்த ஆய்வில் நிரூபித்துக் காட்டினார் கார்ல் மார்க்ஸ். ஒரு தொழிலாளி 8 மணிநேர வேலையைச் செய்து 10 ரூபாவைக் கூலியாகப் பெறுவானாயின், இதில் அவன் பெறும் 10 ரூபா கூலி அவனால் செய்யப்பட்ட 8 மணிநேர வேலையில் 4 மணித்தியாலத்திற்குரியதென்றும், எஞ்சிய 4 மணித்தியால உழைப்பை முதலாளி இலவசமாக அபகரித்துக் கொள்கிறானென்றும் நிறுவிக் காட்டினார். ஆனால் தொழிலாளிக்கு இந்த விடயம் மூடிமறைக்கப்பட்டு 8 மணித்தியாலத்திற்குரிய கூலியே வழங்கப்பட்டிருப்பதாகவும் தோற்றமளிக்கும்.

இவ்வாறாக ஆண்டான் — அடிமை முறையில் அடிமையின் உழைப்பு முழுமையாகவும், நிலப்பிரபுத்துவ அமைப்பில் பண்ணை அடிமையின் உழைப்பின் பெரும்பகுதியும் கவரப்படுவதை வெளிப்படையாகவே கண்டுகொள்ளமுடிகிறது. ஆனால் முதலாளித்துவ அமைப்பு முறையில் மறைமுகமாக கொள்ளை நடைபெறுகிறது. இங்கு ஆண்டான், நிலப்பிரபு, முதலாளி ஆகிய கபடதாரிகள், தாம் பெரும்பான்மையான மக்களின் உழைப்புச் சக்தியை அபகரிக்கும் நோக்கிற்காகவே அரசாட்சியைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு, தமக்கேற்றாற்போல் நிர்வாகத்தையும், நீதியையும் சமயத்தையும், கல்வியையும், கலைகளையும் உருவாக்குகிறார்கள். அத்துடன் தமக்குரிய பாதுகாப்புப்படைகளையும் நிறுவிவிடுகிறார்கள். இதனை உணர்ந்தே பெரும்பான்மை மக்கள் ஒரு சிலருக்காக வாழ்வதற்காக நிர்ப்பந்திக்கும் இந்நிலையை உடைத்து நிர்மூலமாக்கப் பெரும்பான்மை மக்களான தொழிலாளர் — விவசாயிகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென உணர்த்தப்படுகிறது. இம்மக்களின் கட்டுப்பாட்டில் அமைந்த சமூக அமைப்பையே 'சோசலிசம்' எனப்படுகிறது. இவ்வமைப்பை நிர்மாணிப்பதற்குத் தொழிலாளர்—விவசாயிகள் தம்முன்னால் இடப்பட்டிருக்கும் மாயத் திரையைக் கிழித்தெறிந்து அரசியல் விழிப்புணர்வைப் பெற்றாக வேண்டும்.

## இலங்கையில் உழவர் :

இலங்கையில் நிலப்பிரபுத்துவம் மேலோங்கி இருந்தபோதே அந்நியர் படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. அந்நியர்கள் தமது நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கவும், முதலாளித்துவ அமைப்பை விஸ்தரிக்கவும் படையெடுத்ததன் விளைவால் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வலிந்து முதலாளித்துவ அமைப்புப் புகுத்துப்பட்டதாகும். இதனால் இயல்பாக—முதலாளி, தொழிலாளி போராட்டங்களூடாக—நிலப்பிரபுத்துவம் சிதைக்கப்படச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இன்றும் இந் நிலப்பிரபுத்துவ அமைப்பின் சிலகூறுகளைக் காணலாம். மட்டக்களப்பில் 'போடியார்' என அழைக்கப்படுபவர்கள் நிலப்பிரபுக்களின் எச்சங்களே! ஏனைய மாவட்டங்களில் நிலவும் குத்தகை முறையிலும் நிலப்பிரபுத்துவத்தின் தன்மைகள்தொனிக்கக் காணலாம்.

இங்கு போடியார் போன்றோரினதும், குத்தகைக் காணிக்காரரின் உரிமையாளர்களினதும் ஆதிக்கத்திற்கு உழுபவர்கள் கீழ்ப்படிந்து கிடக்கும் வகையிலேயே அரசாங்க சட்டங்கள் நிலவுகின்றன.

இலங்கையின் மூலை முடக்குகளிலெல்லாம் பரந்து பிரதிபலிக்கும் அரசாங்கங்களின் இனவாத இயல்பு தமிழ்பேசும் உழவர்களையும் பாதிக்காமலிருக்கமுடியாது. தமிழ்ப்பிரதேச விவசாய நிலங்களில் இருந்து நிலக்குடியேற்றம், புனித நகர்த்திட்டம் போன்ற வெளிப்பூச்சினூடு உழவர்களை விரட்டி அடிப்பது கண்கூடு. அல்லை, கந்தளாய், அம்பாறைப் பிரதேசங்களில் உழவர்கள் நிலங்களை இழந்தனர். சேருவில, தீகவாபி போன்ற புனிதநகர்த் திட்டங்களுக்கும் இந்நிலங்கள் பலியாகியும் பலியாகிக்கொண்டும் வருகின்றன.

இன்று, தமிழ் பேசும் உழவர், ஒருசிலரின் கைகளுக்குள் மடங்கி இருக்கும் நிலப்பரப்பில், அவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட தாக்குதல்களையும், இனரீதியான ஒடுக்கலுக்கும் அகப்பட்டு அவதிப்படுவது வெளிச்சமாகியுள்ளது. இந்த இருமுனைத் தாக்குதலினால் உருக்குலைந்து செல்லும் தம் நிலையை நிலைநிறுத்த ஆட்சி அதிகாரத்தைத் தமது செல்வாக்கிற்குரியதாக மாற்றி அமைத்தாக வேண்டும். இந்த இலங்கை உழவர்கள் தனித்து அரசியல் உணவுபெற்று — கிளர்ந்தெழுவதனால் ஏதும்செய்துவிட முடியாது. மாறாக, இலங்கையில் வளர்ச்சி பெற்றிருக்கும் முதலாளித்துவக் கெடுபிடிகளை உக்கிரமாகத் தகர்த்தெறியும் வல்லமை தொழிலாளர்களிடையே இருப்பதை உணர்ந்து அவர்களுடன் தம்மை இணைத்துக்கொள்ளுவதன் மூலமே அடைய முடியும். இதுவே இச்சூழலை ஒத்த ஏனைய நாடுகளில் நடந்த புரட்சிப்போக்குடன் இசைந்ததாகிறது. இதற்கேற்ற போராட்ட உணர்வை மழுங்கடிக்கச் செய்வதற்காகவே ஆட்சியாளர்களினாலும், அடிவருடிகளினாலும் சமயபேதம், பிரதேச வேறுபாடு, இன ஒடுக்கல் முதலானவற்றைக் கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனினும் இவற்றிலிருந்து விடுபட்டவர்களாகி தமக்குச் சாதகமான முடிவைத் தொழிலாள— விவசாயிகள் அடைந்துவிடுவது தவிர்க்கப்படக் கூடியதல்ல.



## "பொங்க வழி இல்லை"

கோவென்று கூவிடும் கோழியாரே — நீர்
காவிவந்த செய்தி என்ன சொல்லுவீரே
பொங்கல் வருகுதென்று புரிந்துகொண்டேன்
பொங்க வழியில்லை என்று புலம்புகின்றேன்
கருமை இருள் அகன்றிடவே கூவுகின்றாய் — எங்க
வறுமை இருள் விலகிடவே கூவிடாயோ.

ஊருக்காக உழைக்கின்ற உழவன் அண்ணை
உன் உள்ளத்திலே என்ன உண்டோ சொல்லுவாயோ
ஏரோடு வாழ்ந்திருந்தோம் இப்போ
எங்கள் பசி தீரவில்லை இந்த நாளில்
மாடிவீடு சுரண்டல் லாபம் இங்கே உண்டு
மண்குடிசை எனக்கு இல்லை என்ன செய்வோம்.

நாளோடு நாள் அலையும் காக்கையாரே — நீர்
நன்றியுள்ள செய்தி ஒன்று சொல்லுவீரே
மண்வாசி விலைவாசி கூடிப்போச்சு — இப்போ
மக்களெல்லாம் மயக்கத்திலே காஞ்சுபோச்சு
எஞ்சாதி உயர்சாதி என்று சொல்லும்
நஞ்சான வார்த்தை இப்போ மலிஞ்சுபோச்சு.

— காளிராசா. —

## பாரதி பாடிய ... (மு. ப. தொடர்ச்சி)

கூட மழுப்பல்இன்றி மிகப் பட்டவர்த்தனமாக எழுதினான் என்பதைஇப்பாடல் நமக்கு உணர்த்தவில்லையா ?

எனவே, அன்றாட வாழ்க்கையைக் கழிப்பதற்கே வக்கும், வசதியுமற்று அல்லலுறும் ஈழத்து உழவர் தம் தாழ்நிலை உருக்குலைய

**வாழ்வைச் சுவைக்கும் வழியைத்**
**தடுக்கும்**
**வல்லரன் யாவையுமே**
**சூழ்ந்து உடைத்துச் சுக்கு நூறாக்க**
**'சம்மட்டி' தூக்கிடுவோம்.**

என்னும் பாடலின் அர்த்தத்தைச் செயலுருவுக்குக் கொண்டுவர முயல்வார்களாக !

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகச் செய்திகள்

## இஸ்ரேல் அத்துமீறல்

ஈராக்கிய ஆகாயப் பிராந்தியத்தினுள் இஸ்ரேலின் இரண்டு யுத்த விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்தன. ஆயினும் ஈராக்கிய யுத்தவிமானங்கள் அவற்றை விரட்டியடித்துவிட்டன. அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட F- 15 ரக வேட்டைவிமானங்களே ஊடுருவலில் ஈடுபட்டன. கடந்த ஜூன் மாதம் இஸ்ரேலிய குண்டுவீச்சு விமானங்கள் பாக்தாத்திலுள்ள ஈராக்கிய அணுசக்தி ஆலை ஒன்றைத் தகர்த்தெறிந்தன. அப்போது பயன்படுத்திய ஆகாயமார்க்கத்தின்வழியாகவே இம்முறையும் இஸ்ரேலிய விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்தன. இவ்விமானங்கள் ஈராக்கிய எல்லையினுள் 30 மைல்கள் தூரம்வரை ஊடுருவி வந்தன என செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்லெபனுன் மேலாக அத்துமீறிப் பிரவேசித்த இஸ்ரேலிய விமானங்களை சிரிய ஏவுகணைப்பிரிவு துரத்தியடித்தன. வழமையாக அவை அத்துமீறிப் பிரவேசித்து வந்தாலும் தாக்குதல் நடாத்துவதற்கான அறிகுறியுடன் விமானங்கள் பறந்து சென்றமையால் ஏவுகணைத் தாக்குதல் தொடுக்கப்பட்டும் இஸ்ரேலிய விமானங்கள் எதுவும் இலக்குக்குள்ளாகவில்லை என தெரிகின்றது.

## கானுவில் மீண்டும் இராணுவ புரட்சி

கானுவில் மீண்டுமொரு இராணுவ புரட்சி நடைபெற்றது. ஜனதிபதி ஹில்லா லிமானின் பதவி இதன்மூலம் கவிழ்க்கப்பட்டது. விமானப் படை அதிகாரி ஜெரி ரூலிங்ஸே இந்த இராணுவப் புரட்சியை நடத்தி முடித்தார். 30 மாதங்களில் அவரால் நடாத்தப்பட்ட இரண்டாவது இராணுவப் புரட்சி இதுவாகும்.

அரசில் நிலவும் ஊல்களை நீக்குமுகமாகவே தான் மீண்டும் பதவியைக் கைப்பற்றியிருப்பதாக விமானப்படை அதிகாரி ரூலிங்ஸ் அக்ரா தெரிவித்துள்ளார். 38 வயதான அதிகாரி ரூலிங்ஸ், அந்த நாட்டில் வாழும் 17 லட்சம் மக்களுக்கும் விடுத்த செய்தியொன்றில் தனது இந்த இரண்டாவது முயற்சியில் தனது உத்தேசத் திட்டம் தோல்வியுறுமானுல் தன்னைத் துப்பாக்கி அணிமூலம் சுட்டுக் கொல்லலாம் எனவும், தான் அதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கு சமூகப் புரட்சி ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டிருக்கின்ருர். இப் புரட்சியின்போது ஏற்பட்ட சேதங்கள் பற்றி வெளியிடப்படவில்லை. ஆயினும் பல இராணுவ வீரர்கள் இறந்திருக்கலாம் என ஊர் ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

லிபிய அதிபர் கடாபியின் கனவை அடியொற்றிச் செல்வதே தனது நோக்கம் என ரூலிங்ஸ் உறுதிகொண்டுள்ளார்.

## வேல்ஸ் தீவிரவாதிகள் கிளர்ச்சி

பிரித்தானியாவில் வேல்ஸ் சமூக தேசியவாதிகளும் தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர். சுயாட்சி கோரும் இந்தத் தீவிரவாதிகளினுல் நேற்று முன்தினம் மூன்று குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

லண்டனில் பத்திரிகை நிறுவனங்களின் நிலையமாகத் திகழும் பிளீட் வீதிக்கு அண்மையிலுள்ள அலுவலகம் ஒன்றினுள்ளும் குண்டு ஒன்று வெடித்தது. பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரின் கணவர் டெனிஸ் பணிபுரியும் அலுவலகம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்றைப் பொலிசார் கண்டுபிடித்தனர். ஸ்ரப் போட்- அபோன்- அவொன் என்ற நகரத்தில் உள்ள அலுவலகம் ஒன்றில் பிரதமரின் கணவர் ஆலோசகராக பணிபுரிந்து வருகின்ருர். வட வேல்ஸ் அபிவிருத்தித் திட்டத்தை துரிதப்படுத்துவதற்கான பிரதமர் திருமதி தட்சரின் நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த வருடம் எழுந்த சர்ச்சையில் இந்த நிறுவனமும் சம்பந்தப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் கெடுபிடி சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

பாகிஸ்தானில் அரசியல் எதிரிகளை சிறையில் தள்ளுதல் சித்திரவதை செய்தல், மரண தண்டனை விதித்தல் போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் பாகிஸ்தானில் அதிகரித்துள்ளன என புள்ளிவிபர அடிப்படையில் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. சிவிலியன் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட பின்னரே மனித உரிமைகளை மீறும் இந்த நடவடிக்கைகள் கடுமையடைந்திருக்கின்றன என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது.

அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது, கடந்த வருடம் பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் 1, 250 கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. 1980 ஜனவரிக்கும் 1981 ஆகஸ்ட்டுக்கும் இடையில் சித்திரவதை மூலம் 10 கைதிகள் மாண்டார்கள். கைது செய்யப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் எண்ணிக்கையை மதிப்பிடுவதில் பெரும் கஷ்டம் நிலவுகிறது. 1981 மார்ச் மாதத்தில் மட்டும் அரசியல் காரணங்களுக்காகச் சுமார் 6000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவ அதிகாரிகளின் முடிவை சிவிலியன் நீதிமன்றங்கள் பரிசிலனை செய்ய முடியாது என இராணுவ ஆட்சியாளர் ஷியா உல் ஹக் தடைவிதித்திருக்கின்ருர். இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை தனதறிக்கையில் கூறியுள்ளது

## இந்தியாவில் வேலை நிறுத்தம்

இந்திய மத்திய அரசுக்கெதிராக வேலை நிறுத்தப் போராட்டத்தில் தொழிலாளர்கள் குதித்தனர். கடந்த செவ்வாய்க் கிழமை (12.01.82) அன்று எதிர்க் கட்சிகளின் ஆதரவுடன் நடைபெற்ற வேலை நிறுத்த அசம்பாவிதங்களில் மாண்டவர்களின் தொகை 12 ஆக உயர்த்திருக்கின்றது. வேலை நிறுத்தம் நடைபெற்ற அன்று 25,000 பேர் கைது செய்யப் பட்டுள்ளராயினும் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.

இவ் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டத்தின் போது கைகலப்பில் ஈடுபட்டவர்களை விரட்ட பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனுல் உத்தரப் பிரதேசத்தில வாரணசி புனித நகரில் இருவரும், தமிழ் நாட்டில் இருவரும் இறந்துள்ளனர். வேலை நிறுத்த ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மேற்கு வங்காளத்தில் இடம் பெற்ற மோதலில் அறுவர் மரணமடைந்துள்ளனரெனவும் செய்திகள் கூறுகின்றன.

இந்த வேலை நிறுத்தத்தை எட்டு தொழிற்சங்க சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

## சந்தா விபரம்

எமது சந்தாதாரர்கள் தமது சந்தாக்களை புதுப்பித்துக் கொண்டும், புதிதாக சந்தாதாரர்களாக விரும்புவோர் தம்மை இணைத்துக்கொண்டும் தர்க்கீக வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பீர்கள் என நம்புகின்ருேம்.

அரையாண்டுச் சந்தா 15—00 ரூபா
( தபாற் செலவு உட்பட )

ஓராண்டுச் சந்தா 30—00 ரூபா.

உங்கள் சந்தாக்களை தபாற் கட்டளையாகவே அன்றி காசுக்கட்டளையாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும், உங்கள் விலாசங்களை தெளிவாகத் தரவும்.

**எஸ். விக்னேஸ்வரன்**
''தர்க்கீகம்''
த. பெ. எண். 103
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ் விக்கினேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதானவிதி 360-இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வெளிப்பாடு

'' நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலைகெட்ட மாந்தரை நினைத்து விட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள் — ஒரு
கோடி என்ருல் பெரிதாமோ ?
ஐந்து தலைப் பாம்பென்பான் — அப்பன்
ஆறுதலை என்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார் — பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார் ''

என்று, அன்றைய சமூக நிலமையை சாடி சுதந்திர முழக்கம் செய்த புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியின் நூருவது ஆண்டு நினைவு விழாவினை, தமிழ்கூறும் நல்லுலகம் மட்டுமல்ல, சமதர்ம சமுதாயம் விரும்பும் அத்தனை உலக மக்களாலும் பெருவிழாவாக கொண்டாடப்படுகின்ற இவ்வேளையில், இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களும் தமது உள்ளக் குமுறல்களை வெறும் உணர்ச்சி பூர்வமாக அல்லாமல் உணர்வு பூர்வமாக பாரதியை எண்ணி வெளிக்காட்டுவதில் வியப்பேதுமில்லை.

பாரதியைப்பற்றி அவனது வாழ்வு, கவித்துவம் பற்றி எழுதுவதானுல் முடிவில்லாமல் தொடரலாம். ஆனுல், இந்திய தேசிய விடுதலை எழுச்சிக்கும், அன்றைய சமூக சீர்கேடுகளின் மாற்றத்திற்கும் வழிகோல முற்பட்டான் பாரதி என்ருல் அது போதும் அவன் பெருமையை பறைசாற்ற. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கொடும்பிடியை எதிர்த்து குரல் கொடுத்தார்கள் பல தேசிய வாதிகள். ஆனுல் அன்றைய சமூகக் கெடுபிடிகளை, சமுதாய சீர்கேடுகளை உள்ளக் குமுறலின் மூலம் புட்டுக்காட்டி தன் கவித்துவத்தின்மூலம் மக்கள் எழுச்சிக்கு வித்திட்டான் பாரதி. இதனுல் தான் இன்று மட்டுமல்ல எதிர்காலத்திலும் பாரதியின் கவித்துவம் உயிர்ப்புள்ளவையாக, அர்த்த புஷ்டியானதாக நிலைத்து வருகின்றது. இவை ஈழவர் சமுதாயத்திற்கும் ஒரு பாடமாக இருக்கின்றது.

பாரதி பாண்டித்தியம் பெற பரிசுத்த பரமாத்மா கவிஞனுக இருக்கவில்லை. மாருக, சிறுவயதிலிருந்தே சீர்கெட்ட சமுதாய சூருவளியால் அல்லல்பட்டு, வறுமைப்பிணியால் வாடிய அவனது உள்ளக் குமுறல்களே உயிர்த்துடிப்புள்ள கவிதைகளாக வெளிவந்தன. அப்போது எள்ளி நகையாடியவர்கள் எத்தனைபேர் ! அவனது உள்ளார்ந்த எண்ணப்பாடுகளையெல்லாம் மூடிமறைத்துவிட்டு, குடிகாரன், கஞ்சாக் கவிஞன் என்றெல்லாம் இழிந்தோர் எத்தனைபேர் ! இவர்களெல்லாம் இன்று பாரதிக்கு விழா எடுத்து பெருமை பேசுகின்றனர் என்ருல், சமுதாயத்தின் பால் தீர்க்க தரிசனத்துடன் அக்கறைகொண்டு அதன் மேன்மைக்காய் பாடுபட்ட மேதாவிகளை காலப்போக்கில்தான் மக்கள் புரிந்து கொள்கின்றனர் என்பது வரலாற்றுப் பாடம்.

பாரதி, மொழியின் பெயரால் வெறியனுகவோ அல்லது '' பாரதம் '' என்ற குறுகிய தேசிய வெறிவாதியாகவோ இருந்திடவில்லை. மாருக, அகில உலகமனைத்தும் வாழும் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காய் குரல்கொடுக்கும் சர்வ தேசியவாதியாக திகழ்ந்தான் என்பதை அவனைப்பற்றி புரிந்தவர்கள் அறிவார்கள். தான் வாழ்ந்த சமுதாயத்தின் கேடுகளையும் அதனுேடு பிணைந்த ஏகாதிபத்திய அடக்குமுறைகளையும், உலகளாவி விரிந்து பட்ட சமூக சீர்கேடுகளையும் சாடி ஒரு பொதுவுடமைச் சமுதாயத்தின் மகோன்னதத்தை உணர்த்தினுன் பாரதி.

எனவே அவனது பெருமைகளை வெறுமனே பிதற்றிவிட்டு, நாட்டத்தில் கொள்ளாமல் விடுவதை விடுத்து, உழவர் திருநாளாம் இத் தைத்திருநாளில், உழவின் பெருமையையும் பறைசாற்றிய பாரதியின் நூற்ருண்டிலே, இன்று விரவியிருக்கும் சமூக கொடுமைகளை, அடக்குமுறைகளை அறவே துடைத்தொழிக்கும் சமத்துவ சமதர்ம சமுதாய மாற்றத்திற்கு வித்திட வேண்டியது ஒவ்வொரு மனிதனது கடமையாகும். இதுவே தர்க்கீக பணியாகும்.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்ற, அதே வேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனுய்வு செய்யலாம். அதன் மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தைக் கோருபவையாகவும் அமையட்டும்.

**''தர்க்கீகம்''**
த. பெ. எண். 103, யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்